மாலை முரசு
பக்கங்கள் 22+ 03
முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | தை 13 செவ்வாய்க்கிழமை 27.01.2026 | அதிர்வு 181

## இன்றும் தொடரும் வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு




நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து அரச வைத்திய சாலைகளிலும் அரச வைத்திய அதிகாரிகள்

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்




# இந்தியாவில் நிபா வைரஸ்

## உஷார் நிலையில் இலங்கை

இந்திய மாநிலத்தில் நிபா வைரஸ் பரவியதைத் தொடர்ந்து ஆசியாவின் சில பகுதிகளில் உள்ள விமான நிலையங்கள் சுகாதாரக் கண்காணிப்பு மற்றும் பயண பரிசோதனைகளை கடுமையாக்கத் தொடங்கியுள்ளன.

இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் 5 பேருக்கு நிபா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கிவிட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களில் தாய்லாந்து, நேபாளம் மற்றும்

04

# பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் ஷிராந்தி இன்று முன்னிலையாகவில்லை!

## இரு வாரங்கள் கால அவகாசம் கோரினார்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாவதற்குக் கால அவகாசம் கோரியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ”சிரிலிய” எனும் பெயரில் நடத்திச் செல்லப்பட்ட வங்கிக்கணக்கில் இடம்பெற்றுள்ளது எனக் கூறப்படும் நிதி முறைகேடு தொடர்பில் விசாரணை இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பான மேலதிக

04



# கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக வவுனியாவில் நேற்று ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகளும் பொது அமைப்புகளும்

## 30ஆம் திகதி நெடுங்கேணியில் கவனவீர்ப்புப் போராட்டம்

தற்போது பெரும் பேசுபொருளாகியுள்ள அரசால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்தை நிறுத்தக் கோரி, வவுனியா மாவட்ட பொது அமைப்புகளுடன் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து நேற்று வவுனியாவில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

வவுனியா – குருமன்காட்டில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகமான தாயகத்தில் மேற்படி கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாகக் கலந்து கொண்டவர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் ஆபத்துகளை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கையாக, எதிர்வரும் 30ஆம் திகதி வவுனியா வடக்கின் நெடுங்கேணி பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள கவனவீர்ப்புப் போராட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இந்தக் கூட்டத்தில் வவுனியா மாவட் டத்தைச் சேர்ந்த பல்வேறு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.









# கள்வர்களின் ஆட்சிக்கு மீண்டும் இடமில்லை!

## பீல்ட் மார்ஷல் பொன்சேகா திட்டவட்டம்

"கடந்த காலங்களில் நாட்டை நாசமாக்கிய கள்வர் கூட்டம், மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு இடமளிக்கக் கூடாது. அதற்குரிய அனைத்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப் படும்."

– இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசை வீழ்த்துவதற்கு எதிரணிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பணி யாற்றி வருகின்றன. சில எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணி அமைத்துப்




பயணிக்கவுள்ளன என்றும் தெரிய வருகின்றது. இவ்வாறான நிலையி லேயே, கள்வர்களின் கூட்டம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற அனுமதிக்கப் போவதில்லை என்று சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் தற்போதுள்ள எதிரணிக ளின் கூட்டணியானது கள்வர்களின் ஒன்றிணைவாகும். அதனால்தான் ஒருவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்தால் மற்றையவர்கள் கொதிக் கின்றனர்.

பழைய அரசியலை முன்னெடுப் பதற்கு எதிரணிகள் முற்படுகின்றன. இதற்கு மக்கள் இடமளிக்கக்கூடாது. மக்களுக்காக அல்லாமல் தமக்காகவே அந்தத் தரப்புகள் அரசியல் நடத்து கின்றன." – என்றார்.



## வீதியைக் கடக்க முற்பட்ட போது

# 'கப்' ரக வாகனம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் பலி!

வீதியைக் கடக்க முற்பட்ட குடும் பஸ்தர் ஒருவர், "கப்" ரக வாகனத்துடன் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

சுண்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஆதிமூலம் சிவகுமார் (வயது 55) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுண்டிக்குளம் சந்தி யில் கடந்த 23ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த குடும்பஸ்தர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலை யில், மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.

தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரு கின்றனர்.

விபத்துடன் தொடர்புடைய வாகனச் சாரதிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## இன்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கிய தொழிற்சங்க நடவடிக்கை இன்றும் தொடர்கின்றது.

பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களைச் செயற்படுத்தத் தவறியமையைக் கண்டித்து, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கடந்த 23 ஆம் திகதி நாடு முழுவதும் 48 மணி நேர தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடங்கியது.

நேற்றுமுன்தினம் காலை 8 மணிக்கு அந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முடிவடைந்தது. அதன் பின்னர் வைத்திய சாலைகளில் தினசரி சிகிச்சைகள் வழக்கம் போல் முன்னெடுக்கப்பட்டன.

இருப்பினும், சுகாதார அதிகாரிகள் எழுத்துபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டங்களை முறையாகச் செயற்படுத்தத் தவறிவிட்டனர் எனக் கூறி, நேற்றுக் காலை 8 மணி முதல் தொழிற்சங்க நடவடிக்கையை அரச வைத்திய அதி காரிகள் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இந்தநிலையில் இந்தப் பணிப்புறக் கணிப்பின் ஒரு பகுதியாக வைத்திய சாலைக்கு வரும் நோயாளிகளுக்கு மருந்துகளை வெளியில் உள்ள மருந் தகங்களில் வாங்குமாறு பரிந்துரைத்தல், தேவையான மருத்துவப் பரிசோதனை களை வெளியில் உள்ள தனியார் ஆய் வகங்களில் மேற்கொள்ளுமாறு நோயாளிகளுக்குப் அறிவுறுத்துதல் போன்ற செயற்பாடுகளிலிருந்து விலகு வதற்கு மருத்துவர்கள் தீர்மானித் துள்ளனர்.

இதேவேளை, மனித உயிர்களுடன் விளையாட வேண்டாம் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய வங்கியின் அனைத்து பணத் தையும் வழங்கினாலும் கூட, அரச வைத் திய அதிகாரிகள் சங்கத்தின் அரசியல் நோக்கங்கள் நிறைவேறாது என்று பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.



# ஒரே பிரசவத்தில் 5 ஆண் குழந்தைகளைப் பெற்ற தாய்!

(அபு அலா)

மட்டக்களப்பு – கிரான்குளத்தைச் சேர்ந்த சிவா மனோஜினி ஒரே பிரசவத்தில் 5 ஆண் குழந்தைகளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஆரோக்கியமாகப் பெற்றெடுத்த அரிய சம்பவம் நேற்றைய தினம் தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த 5 குழந்தைகளைப் பெற்ற தாயும் – 5 குழந்தைகளும் நலமுடன் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தனர்

## இந்தியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைவான் ஆகியவை அடங்கும்.

நிபா என்பது ஒரு விலங்கு நோயாகும். இது முக்கியமாகப் பாதிக்கப்பட்ட பன்றிகள் மற்றும் வௌவால்கள் மூலம் மனிதர்களுக்குப் பரவுகின்றது. ஆனால், நெருங்கிய நபருக்கு நபர் தொடர்பு மூலமாகவும் பரவலாம்.

மேற்கு வங்காளத்தில், ஒரு மருத்துவமனையில் வைரஸ் கண்டறியப்பட்ட பின்னர் சுமார் 100 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதே மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஆண் மற்றும் பெண் செவிலியருக்கு முதல் இரண்டு உறுதிப்படுத்தப்பட்ட தொற்றுகளுக்குப் பிறகு ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் மற்றொரு ஊழியர் நேர்மறை சோதனை செய்தனர்.

தாய்லாந்தில், கொவிட்-19 தொற்று நோய்களின் போது நிறுவப்பட்ட நுட்பங்களைப் பயன்படுத்தி மேற்கு வங்காளத்திலிருந்து வரும் பயணிகளுக்கான சுகாதார பரிசோதனையை பொது சுகாதார அமைச்சகம் முக்கிய விமான நிலையங்களில் முடுக்கிவிட்டுள்ளது.

இந்தியாவின் கிழக்கு மாநிலமான மேற்கு வங்காளத்தில் நிபா வைரஸ் தொற்று கொத்தாக கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை சுகாதார அதிகாரிகள் நிலைமைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்.

இலங்கையின் மூத்த சுகாதார அமைச்சக வட்டாரம் ஒன்று, நிலைமை உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், தேவையான முன்னெச்சரிக்கைகள் ஏற்கனவே நடைமுறையில் இருப்பதாகவும் கூறினார்.

“இலங்கை விழிப்புடன் உள்ளது. பிராந்திய நிலைமையை மிகவும் கவனமாகக் கண்காணித்து வருகிறது. தற்போது உடனடி அச்சுறுத்தல் எதுவும் இல்லை. ஆனால் தேவைப்பட்டால், சர்வதேச சுகாதார அதிகாரிகளின் முன்னேற்றங்கள் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்று அந்த வட்டாரம் தெரிவித்துள்ளது.

விலங்குகள் மற்றும் மக்களுக்கு இடையே பரவும் நிபா வைரஸ், ஒரு தொற்றுநோயைத் தூண்டும் திறன் கொண்டதாக உலக சுகாதார அமைப்பு வகைப்படுத்தியுள்ளது. தொற்றுநோயைத் தடுக்க தடுப்பூசி இல்லை. அதைக் குணப்படுத்த எந்தச் சிகிச்சையும் இல்லை.

முந்தைய தொற்றுகளின் போது 40 வீதம் முதல் 75 வீதம் வரை இறப்பு விகிதங்கள் பதிவாகின. மேலும் தற்போது அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசி அல்லது குறிப்பிட்ட வைரஸ் தடுப்பு சிகிச்சை எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளுக்காகவே ஷிராந்தி ராஜபக்ஷ இன்று பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும், தனிப்பட்ட காரணங்களால் தன்னால் இன்று முன்னிலையாக முடியாது எனப் பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு ஷிராந்தி ராஜபக்ஷ தெரியப்படுத்தியுள்ளார்.

அத்துடன், இரண்டு வாரங்கள் கால அவகாசமும் அவர் கோரியுள்ளார்.



# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு கனேடிய உயர்ஸ்தானிகர் விஜயம்

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டீன் அம்மையார் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

கடந்த இரு நாள்களாக வடக்குக்கான உத்தியோகபூர்வ விஸயத்தினை மேற்கொண்டுள்ள கனேடிய உயர்ஸ்தானிகர் இன்று செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து, பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர், நூலகர் மற்றும் அரசறிவியல், பொருளியல் மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறைகளின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புகளின் போது, அரசியல் பொருளாதார நிலைமைகள் உட்பட சமகால விடயங்கள் பற்றியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கனேடியத் தூதரக அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கட்டுப்பாடு அவசியம்

கைத்தொலைபேசிகளுக்கு அடிமையாகியதன் காரணத்தால், சில பதின்ம வயதுச் சிறுவர்கள் பல்வேறு மனநலப் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருக்கின்றனர் எனத் தேசிய மனநல நிறுவனத்தின் சிறுவர் மற்றும் இளம் பருவ மனநல விசேட வைத்திய நிபுணர் சேனானி விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

"கொவிட் காலத்தில் சமூக ரீதியாக ஒன்றுகூட முடியாமல் போனதால் பாடசாலைக் கல்வி இணைய வழியில் முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாக சிறுவர்கள் தங்களையும் அறியாமல் கைத்தொலைபேசிகளை அதிகளவு பயன்படுத்துவதற்குப் பழகிக்கொண்டனர். தற்போது இது ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இவ்வாறான அடிமைப்பாடுகள் காரணமாக எமது கிளினிக்குகளில் சிறுவர்களை அனுமதிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது" என அவர் தெரிவித்தார்.

ஒருபுறம் போதைப்பொருள்களுக்கு அடிமையானதன் காரணமாக மனநல பாதிப்புகளுக்கு உள்ளான பதின்ம வயதுச் சிறுவர்களும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர். மறுபுறம், 13 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இவ்வாறான திரைப்பார்வைக்கு அடிமையானதன் காரணமாக சிகிச்சைகளுக்காக கிளினிக்குகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இது சமூகத்தில் ஒரு பாரிய பிரச்சினையாக மாறி வருகின்றது என வைத்தியர் சேனானி விஜேதுங்க மேலும் தெரிவித்திருக்கின்றார்.

அந்த வகையில் நோக்கினால் கைத்தொலைபேசிகளுக்கு அடிமையாகின்றமை கூட ஒரு வகையில் போதைக்கு அடிமையாகின்றமை போன்றதுதான்.

குழந்தைகள், மாணவர்கள் அதிக நேரம் தொலைபேசி பயன்படுத்துகின்றமையால் உடல் மற்றும் மன நல பாதிப்பு உருவாகி வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சிறார்கள் ஓடியாடி விளையாடி உடல் நலனை மேம்படுத்தும் விடயத்தில் இருந்து ஒதுங்கி விடுவதால் உடற்பயிற்சி இன்றி அவர்களின் உடல் பருமன் அதிகரித்து, பின்னர் சிறுவயதிலேயே நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் உருவாகலாம் எனக் கூறப்படுகின்றது. கண் பார்வையும் பாதிப்புக்குள்ளாகின்றது.

தொலைபேசியில் மூழ்கிக்கிடக்கும் சிறார்களுக்குத் தூக்கம் கெட்டு, அவர்கள் பகல் நேரத்தில் கூட ஒருவித தூக்க கலக்கத்திலேயே இருக்கும் உணர்வுடன் காணப்படு கிறார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை நீண்ட கால தூக்கமின்மை, குழப்ப மனப்பான்மை, பதற்றம், எந்த வேலையும் செய்ய முடியாத சோர்வு போன்ற பாதிப்புகளையும் இது ஏற்படுத்துகிறது.

குழந்தைகள் தொலைபேசி மூலம் தங்கள் வயதுக்கு பொருத்தமற்ற நண்பர்கள் அல்லது குழுவில் பகிர்ந்து கொள்ளும் பொருத்தமற்ற செய்திகள், ஆபாச படங்கள் அல்லது உரையாடல்களை காணும் போது அவர்கள் சிறு வயதிலேயே ஆபாசங்களை நோக்கி நகரும் அபாயமும் அதிகரித்து இருக்கிறது. இது உளவியல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தி நடத்தை மாற்றங்களை உருவாக்க வாய்ப்பு இருப்பதாகவும் கூறுகிறார்கள்.

மொத்தத்தில் பதின்ம வயது தாண்டும் வரை சிறார்கள் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதற்குக் கடும் கட்டுப்பாடுகளைப் பெற்றோர் விதிப்பது அந்தச் சிறார்களின் உடல், உள மற்றும் எதிர்கால ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது என்றே தெரிகின்றது.



# யாழில் இன்று இராணுவ வாகனமும் காரும் நேருக்கு நேர் மோதி விபத்து!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனம் ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

யாழ்ப்பாண நகரைப் அண்மித்த மடத்தடிப் பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் பாரிய காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# யாழ். வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து கைபேசி திருடிய இளைஞருக்கு விளக்கமறியல்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் நள்ளிரவு வேளையில் அத்துமீறி நுழைந்து கையடக்கத் தொலைபேசியைத் திருடிய குற்றச்சாட்டில் கைதான இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கண்காணிப்பையும் மீறி அத்துமீறி நுழைந்த இளைஞர்



ஒருவர், சுத்திகரிப்புப் பணியாளர்களின் மேற்பார்வையாளரின் கையடக்கத் தொலைபேசியைக் களவாடியுள்ளார்.

இதனை அவதானித்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, கையடக்கத் தொலைபேசியைத் திருடிய இளைஞரை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு, நேற்று மேற்படி இளைஞரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். இதன்போது, அந்த இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.





# மக்கள் நல்வாழ்வு மையத்தின் ஊடாக மன்னார் சாந்திபுரத்தில் வீடு கையளிப்பு

**(மன்னார் நிருபர்)**

மக்கள் நல்வாழ்வு மையத்தின் ஊடாக பொருளாதார ரீதியில் பாதிக்கப் பட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு அந்த மையத்தினுடாக 123 ஆவது வீடு மன்னார் சாந்திபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட நிலையில், நேற்று திங்கட்கிழமை பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த வருடம் மன்னார் பிரதேச செய லாளர் பிரிவில் உள்ள சாந்திபுரம் கிராமத் தில் உள்ள வீடு ஒன்று தீ அனர்த்தத்தில் முற்று முழுதாக எரிந்து சாம்பலாகியது.

குறித்த குடும்பத்தின் நிலையை கருத் தில் கொண்டு அவர்களுக்கு மாற்றீடாக புதிய வீடு ஒன்றை அமைத்துக் கொடுக் கும் நடவடிக்கையில் மக்கள் நல்வாழ்வு மையத்தால் கடந்த வருடம் அடிக்கல் நடப்பட்டு வீடு அமைக்கும் பணிகள் இடம் பெற்றன.



இவ்வாறு அமைக்கப்பட்ட வீடு நேற்று திங்கட்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு பயனாளியிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வு மையத்தின் ஊடாக பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சுமார் 20 லட்சம் ரூபா செலவில் நிர்மா ணிக்கப்பட்ட 123 ஆவது வீடாக இது உள்ளது.

நிகழ்வில் மக்கள் நல்வாழ்வு மையத் தின் தலைவர், பிரதி நிதிகள் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன், மேலதிக அரச அதிபர் எம்.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டு வீட்டை பயனாளியிடம் கையளித்தனர்.






# திருக்கேதீஸ்வர மகா சிவராத்திரி பெருவிழா கலந்துரையாடல் அரச அதிபர் தலைமையில்!

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வர திருத்தலத்தின் மகா சிவராத்திரி பெருவிழா பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயும் முதலாவது கலந்தாய்வுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மன்னார் மாவட்ட அரசா அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் மகா சிவராத்திரி பெருவிழா ஒழுங்குமுறையுடனும் பாதுகாப்பாகவும் பக்தர்களுக்கு எந்தவித அசௌகரியமும் ஏற்படாத வகையிலும் நடத்தப்படுவது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம்,



பிரதேச சபை ஆகியவற்றின் பங்களிப்புடன் வீதி ஒழுங்குபடுத்தல் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்கங்களின் ஊடாக போக்குவரத்து மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு பணிகள், மின்சார விநியோகம், நீர் விநியோகம் , உணவு வழங்கல் , பாதுகாப்பு விடயங்கள், சாரணியர் சேவை, செஞ்சிலுவை சேவை, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ், முதலுதவி படை, மருத்துவ அவசர ஊர்தி சேவைகள் ஆகியவை தொடர்பாக தேவைகள் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், வாகன அனுமதி பத்திரங்கள் வழங்கல் பிரதேச செயலகம் – மன்னார் இணைப்பு அலுவலகம் அமைத்தல், தற்காலிக கொட்டகைகள் அமைத்தல், வர்த்தக நிலையங்கள் ஒழுங்குபடுத்தல், வாகனத் தரிப்பிடங்கள் ஏற்பாடு, ஊடக நடவடிக்கைகள், தீயணைப்பு சேவை, களப்பயண திகதி நிர்ணயம், விலைக் கட்டுப்பாடு உள்ளிட்ட மேலதிக விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு, சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் இராமக்கிருஷ்ணன், மேலதிக அரச அதிபர்கள், பிரதம கணக்காளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், அரச திணைக்களங்கள், பாதுகாப்பு பிரிவுகள், சுகாதார சேவைகள், போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# திருக்கேதீஸ்வரத்துக்கு வரும் பக்தர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்

## ஆலய பரிபாலன சபைத் தலைவர் இராமகிருஷ்ணன் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வரத்துக்கு வரும் பக்தர்களுக்கு எவ்வித அசௌரியங்களும் ஏற்படா வண்ணம் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபைத் தலைவர் எஸ்.எஸ். இராமகிருஷ்ணன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற இருக்கும் சிவராத்திரி விழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட அரசா அதிபர் தலைமையில் நடைபெற்ற முன்னோடி கூட்டத்தைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபைத் தலைவர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இன்று செவ்வாய்கிழமை இது தொடர்பான கூட்டம் இடம்பெற்றது.

இதனை அடுத்து இது தொடர்பில்



ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் வருடா வருடம் இலங்கையின் நாலா பக்கங்களில் இருந்தும் சிவராத்திரியை முன்னிட்டு பக்தர்கள் ஒன்றுகூடுவது வழமையாகும்.

இந்த வகையில் இவ்வருடமும் இங்கு சிறப்பாக நடைபெறுவதற்கான ஒழுங்கு முறைகள் திருப்பணிச் சபையாலும் மாவட்ட செயலகத்தாலும் மேற்கொள்ளப் படுகின்றன.

இம்முறையும் இந்த நாளில் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கலை நிகழ்வுகள், மேள வாத்தியங்கள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை ஆலய திருப்பணி சபை மேற்கொண்டுள்ளது.

காலை தொடக்கம் அடுத்தநாள் வரை சிவராத்திரி விழாவை முன்னிட்டு விஷேட பூஜைகள் நடைபெறும்.

இரவு விஷேட லிங்கேஸ்வர பூஜைகள் நடைபெறும். இதில் ஏளு குருக்கள்மார் ஈடுபடுவர். நித்திரை விழித்துக் கொண்டு இருக்கும் பக்கதர்கள் இந்த பூஜையில் விஷேடமாக கலந்து கொள்வர்.

பாலாவியில் தீர்த்தம் ஆடிய பக்தர்கள் அங்கிருந்து நீரைக் கொண்டு வந்து லிங்கத்துக்கு அபிஷேகம் செய்யும் முக்கிய நிகழ்வும் நடைபெறும்.

பக்தர்களின் நலன்கருதி இங்கு வரும் சகலருக்குமான அத்தியாவசிய சேவைகள் மன்னார் மாவட்ட செயலக ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும்.

ஆகவே இங்கு வரும் பக்தர்களுக்கு எவ்வித அசௌரியங்களும் ஏற்படா வண்ணம் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். –என்றார்.



# மருதங்கேணி பொதுச் சந்தையில் பரு. பிரதேச சபையால் சிரமதானம்

**(பூ.லின்ரன்)**

பருத்தித்துறை பிரதேச சபையால் மருதங்கேணி பொதுச் சந்தையில் விசேட சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொதுச் சந்தையின் சுற்றுச்சூழல் முழுவதும் புற்கள், பற்றைகள் மற்றும் மிருக எச்சங்கள் சூழ்ந்து காணப்பட்டதால் மருதங்கேணி பொதுச் சந்தைக்கு வரும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கி வந்தனர்.

அது மட்டும் அல்லாமல் பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வியாபாரிகளும் தமது அன்றாட வியாபார நடவடிக்கையில் பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இதனை அடுத்து வடமராட்சி கிழக்கு மக்கள் மற்றும் வியாபாரிகள் இந்தச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸிடம் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து, உடனடியாக தவிசாளரின் உத்தரவை அடுத்து மருதங்கேணி பொதுச் சந்தை வளாகத்தில் இன்று பருத்தித்துறை பிரதேச சபையால் விசேட சிரமதான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.





# சாய்ந்தமருதில் உணவு கையாளும் நிலையங்களில் இன்று பரிசோதனை

**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட உணவகங்கள் மற்றும் சில்லறை வியாபார நிலையங்கள் இன்று விசேட சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த பரிசோதனைகள் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நுளம்பு களத் தடுப்பு உதவியாளர்களின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டன.

பரிசோதனையின் போது உணவுப் பாதுகாப்பு, சுகாதார நடைமுறைகள், சுற்றுப்புற தூய்மை மற்றும் நுளம்பு வளர்ச்சி ஏற்படக்கூடிய சூழல்கள் உள்ளிட்ட அம்சங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உரிய கால அவகாசம் வழங்கப்பட்டது. வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு சுகாதார விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிசெய்ய இத்தகைய பரிசோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# திருமலையில் மாணவனைக் காணோம்

(எஸ்.கீதபொன்கலன்,
எம்.எம்.நௌபீக்)

திருகோணமலை நீதிமன்ற வீதியைச் சேர்ந்த 17 வயதுடைய எம்.எல்.எம்.எம். முன்சித் என்ற பாடசாலை மாணவன் நேற்று திங்கள் காலை முதல் காணாமல் போயுள்ளார். இது பற்றி பெற்றோரால் திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை பிரபல வழக்கறிஞரின் மகனான இந்த மாணவன் நேற்று காலை வீட்டிலிருந்து பாடசாலைக்கு செல்கின்றார் எனக் கூறி விட்டு வெளியேறியுள்ளார். எனினும் மாணவர் மாலை வரை வீடு திரும்பவில்லை.

இவ் மாணவர் திருகோணமலையில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலை மாணவராவார். திங்கள் காலை பாடசாலையில் நடைபெற்ற பரீட்சைக்கு மாணவர் சமுகமளிக்கவில்லை. இது குறித்து விசாரித்த பின்னர் பாடசாலை நிர்வாகம் மாணவர் காணாமல் போனமை குறித்து பெற்றோருக்குத் தகவல் அளித்துள்ளனர்.



மெக்கேஷியர் மைதானத்திற்கு எதிர்ப்புறமாக உள்ள சமுத்திரகம கரையோரமாக உள்ள பற்றைக்காட்டில் மாணவனின் சைக்கிள் மற்றும் புத்தகங்களுடன் கூடிய பாடசாலைப் பையை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

மேல் விசாரணைகள் துறைமுக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தவிர, திருகோணமலையில் மேலும் இருவர் காணாமல் போயிருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது. கடற்படையில் கடமையாற்றுகின்ற மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இளம்பெண்ணும் திருகோணமலை பொது வைத்தியசாலை முன்னாலுள்ள ஓட்டோத் தரிப்பிடத்தில் ஓட்டோ ஓட்டும் சாரதியும் காணாமல் போயிருக்கின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

இக்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய ஓட்டோச் சாரதி தாக்கப்பட்ட நிலையில் திருகோணமலை பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த மூன்று சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையால் அச்சப்படத் தேவையில்லை என்று வெளிவிவகாரப் பிரதி அமைச்சரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அருண்ஹேமசந்திரா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சாய்ந்தமருது பொலிஸ், சுகாதார துறை இணைந்து சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறித்துக் கலந்தாய்வு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் புதிதாக கடமையேற்றுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு பொறுப்பு பொலிஸ் உத்தியோகத்தர் ஐ.எம். மர்சூக், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் ஆகியோருக்கு இடையிலான சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறித்த கலந்துரையாடல் நேற்று சாய்ந்தமருது சுகாதார அலுவலகத்தில் இடம்பெற்றது.



இந்தக் கலந்துரையாடலின் போது, சாய்ந்தமருது பிரதேசம் தற்போது எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் சவால்கள் மற்றும் நிலவும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக, சுற்றுச்சூழல் மாசுபாடு, கழிவகற்றல் தொடர்பான சிக்கல்கள் மற்றும் பொது சுகாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து ஆழமான கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

அத்துடன், இவ்வாறான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளை முன்வைக்கும் வகையில், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்றிட்டங்கள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் கள ஆய்வுகளை மேற்கொள்வது, சுற்றுச்சூழலை பாதிக்கும் சட்டவிரோதச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த உரிய சட்ட நடவடிக்கைகள் எடுப்பது உள்ளிட்ட விடயங்கள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்த கலந்துரையாடல், சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் பொலிஸ் துறையும் சுகாதார துறையும் இணைந்து செயல்படுவதற்கான ஒரு முக்கிய அடித்தளமாக அமைந்துள்ளது எனவும், எதிர்காலத்தில் இத்தகைய ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் தொடரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.








# சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகாபாரத தொடர் அருளுரை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின், ஆச்சிரம முதல் வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில்,

ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவை ஆசிரியர் இரா. செல்வவடிவேல் நிகழ்த்தினார்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.



# தேசிய ரீதியில் சாதனை படைத்த காரைதீவு மாணவி ரிதீஷ்கா!




**(வி.ரி.சகாதேவராஜா)**

புத்தசாசன , சமய கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து நடத்திய தேசிய இலக்கிய போட்டியில் “பாடல் நயத்தல்” நிகழ்வில் தேசிய ரீதியில் 3 ஆம் இடத்தை காரைதீவு இ.கி.ச. பெண்கள் பாடசாலை மாணவி அனுர்ஜன் ரிதீஷ்கா பெற்றுள்ளார்.

இதற்கான சான்றிதழ், பதக்கம் மற்றும் பணப்பரிசில் என்பன சனிக்கிழமை இடம்பெற்ற தேசிய இலக்கிய விழாவில் வைத்து வழங்கப்பட்டது.



# கொத்மலை பேரிடர் மீட்புப் பணிகளை ஆய்வு செய்தார் மத்திய மாகாண ஆளுநர்!

(மஸ்கெலியா விசேட நிருபர்)

டித்வா சூறாவளி காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பாதகமான வானிலை காரணமாகக் கொத்மலை பிரதேச சபை பகுதியில் ஏற்பட்ட பேரிடர் நிலைமையை மீட்பது குறித்து மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன் தலைமையிலான குழு சிறப்புக் கள பயணத்தை மேற்கொண்டது.

இந்த ஆய்வுப் பயணத்தின் போது, நிலச்சரிவுகள் மற்றும் நிலச்சரிவுகளால் சேதமடைந்த சாலை மேம்பாட்டு ஆணையம், மாகாண சாலை மேம்பாட்டு ஆணையம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான சாலைகளின் புனரமைப்பு மற்றும் போக்குவரத்து, விவசாயம், சுற்றுலா மற்றும் பிற துறைகள் உள்ளிட்ட பல துறைகளில் கவனம் செலுத்தப்பட்டது.

அனர்த்தத்தால் கொத்மலை, ஹறாங்கல, தம்பகல, அஹஸ்வெவ சாலை, அளுத்வத்த மண்சரிவு மற்றும் மாற்று சாலைக் கட்டுமானம், வர்தனகும்புர மண்சரிவு, கலப்பிட்டிய சாலை மண்சரிவு, புடலுஓயா ஈடன் வட்ட பாலம் என்பன அழிவடைந்தன. இந்த நிலையில் எம்போடாகம மண்சரிவு மற்றும் அதன் காரணமாக ஏற்பட்ட சாலைகளின் அழிவு, சாலைகளை மீட்டெடுப்பது மற்றும் பிற நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

ரம்பொட எல்ல மற்றும் புனா எல்லையைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள பேரிடர் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் அந்தப் பகுதிகளைச் சுற்றுலா தளங்களாக மேம்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

கொத்மலை பிரதேச சபைப் பகுதியில் ஏற்பட்ட பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான சாலைகள் போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் ஒரு சில சாலைகளில் மட்டுமே பயணிக்க தயார் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.



# திருமலை பன்குளம் நாகதம்பிரான் ஆலயத்தின் மீது சிங்கள - பௌத்த இனவாதம் மீண்டும் அச்சுறுத்தல்!



திருகோணமலை மாவட்டத்தின் முன்பு முதலிக்குளம் என தமிழ்ப்பெயர் கொண்ட, இன்றைய மொறாவேவ பிரதேச செயலாளர் பிரிவில், பன்குளம் கிராமத்தில் அமைத்திருப்பது பன்குளம் அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம்.

இந்த ஆலயம் நீண்டதொரு வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்ட ஆலயம். அப்பகுதி மக்களால் காலா காலமாக வழிபடப்பட்டு வந்த ஆலயம்.

1950 ஆம் ஆண்டுகளில் மணியகார வம்சத்தவரான, இன்றைய கோவில் தலைவர் குமரசாமி ஜெயராஜ் பரம் பரையினர், ஆலயத்தைச் சிறப்பாக அமைத்து பூஜை வழிபாடுகளில் ஈடு பட்டு வந்தனர்.

ஆலயத்தோடு அண்டி , பாலர் பாடசாலைகள் என்பவற்றை அமைத்து பரிபாலித்து வந்தனர். 450 இற்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் கிட்டத் தட்ட 2000 பேர் வரை இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வந்தனர் என 1982 களின் வாக்காளர் பட்டியல் கூறுகிறது.

இந்த நிலையில் ஆங்கிலயரின் ஆதிக்கம் இலங்கையில் இருந்து விடு படத் தொடங்கிய காலத்தில் இருந்து , மெல்ல மெல்ல சிங்கள பௌத்த மேலாதிக்கம் இப்பகுதியில் உள்ள தமிழர்களை நசுக்க தொடங்கியது.

தமிழர்கள் சார்ந்து தந்தை செல்வ நாயகம் போன்ற தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட சாத்வீகப் போராட் டகாலங்களில், இந்தச் சிங்கள எல் லையோர கிராமங்களில் இவர்களின் தலையீடுகள் அதிகரிக்கலாயின.

இந்தவகையில் 1983 களில் நடந்த இனவன்முறையின் போதும் , இந்த ஆலயம் சிங்களவர்களால் தாக்கப்பட் டது. பூசைநடந்து கொண்டிருந்த போது, அங்கு வந்த இனவாதிகள் மற்றும் பிக்குகளால் தாக்கப்பட்ட நிலையில் சிலர் உயிரிழந்த சம்பவங் களும் உள்ளன. இதன் பின் இந்தக் கிராமம் தொடர் கொதிநிலையிலேயே இருந்து வந்தது .

அதனைத்தொடர்ந்து 1992 களில் இக்கிராமத்தில் நடந்த படுகொலையில் கிட்டத்தட்ட 150 பேர் வரையான தமிழர் கள் படுகொலை செய்யப்பட்டனர் .

இப்படுகொலையை பன்குளப் படுகொலை என இன்றும் அழைப்பர்.

இந்த நிலையில் இந்தப் பகுதியை விட்டு முற்று முழுதாகத் தமிழர்கள் வெளியேறினர்.

அந்த இடங்கள், தமிழ் மக்களின் வாழ்விடங்கள், கோவில்கள், பாட சாலைகள் என அனைத்தும் , சிங்கள இராணுவத்தினரால் புல்டோசர் போட்டு இடித்து தரைமட்டமாக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்கள், அகதி முகாம்களிலும், இந்திய அகதி முகாம்களிலும் ஐரோப்பியா, ஆஸ்ரேலிய, அமெரிக்க நாடுகளுக்கும் அகதிகளாக குடிபெயர்ந்தனர்.

2009 ஆம் ஆண்டுகளில் யுத்தம் நிறைவடைந்த பின்னர், ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை ஆகியன வழங்கிய தொடர் அழுத்தம் காரணமாக, அந்தப் பகுதிகளில் கட்டம் கட்டமாக, மீள் குடியேற தமிழ் மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனாலும் அந்தப் பகுதியில் சென்று மீள்குடியமர, பாதிக்கப்பட்ட மக்கள் அஞ்சினர். இருந்த போதும் நாகதம் பிரான் ஆலயத்தை மீள உருவாக்கி, அந்த ஆலயத்தை சூழ உள்ள பகுதிக ளில் , மீள குடியமர முடியும் எனவும், அதற்கான உதவிகளை தன்னால் வழங்க முடியும் எனவும் , அப்போது இருந்த திருகோணமலை நாடளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் ஆலோ சனை, வழிகாட்டுதலின் பெயரில் மக்கள் மீள்குடியமர்ந்தனர்.

அவ்வப்போது சிங்கள இனவாதி களால், மீள் குடியேற்றப்பட்ட, தமிழ் மக்கள் மீது , சிங்களவர்களின் அடக்கு முறை தொடர்ந்த வண்ணமே இருந்தது.

அதனை அப்போது இருந்த நாடளு மன்ற உறுப்பினர், இலங்கையில் உள்ள அமெரிக்க - இந்திய தூதரகங்க ளுக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் மூலமாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து தமிழர்களை பாதுகாத்து வந்தார்.

ஆனாலும் 2010 இல் இருந்து 2020 வரையான காலப்பகுதியில், இந்தப் பகுதியைச் சேர்ந்த 9 தமிழ் செயற் பாட்டாளர்கள் மர்மான முறையில் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட் டனர்.

ஆனாலும் அந்த இடத்தில் பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் மீண்டும் மீள் குடியேற வேண்டும் என்ற வேட்கை தணியாதவர்களாக ,மேலும் அப்பகுதியில் குடியேறினர்.

அப்பிரதேசம் நல்ல விவசாயநிலம். பன்குளம் மற்றும் முதலிக் குளம் ஆகிய குளங்களில் இருந்து இரண்டு போக பயிர்ச்செய்கைக்கும் போதிய நீர் கிடைக்க கூடிய இடம். நெல், தென்னை, வாழை எனப் பல்லின பயிற்ச் செய்கையை மேற்கொள்ளக் கூடிய நல்ல பிரதேசம் பன்குளம்.

இத்தகைய சூழலில் பழைமை வாய்ந்த பன்குளம் அருள்மிகு நாகதம் பிரான் ஆலயத்தை மீள ஆகம முறைப் படி, கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், பிள்ளையார், முருகன், வைரவர், ராகு, கேது, பரிவாரக் கோயில் களை, அந்த ஆலய மணிய கார வம்சத்தினராகிய குமாரசாமி குடும்பத் தினரால், ஆலயம் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் புதிதாக கட்டப்பட்டது . 2022 களில் மஹா கும்பாபிஷேகம் செய்யப் பட்டு , நித்திய - நைமித்திய கிரிகைகள் இடம்பெற்று வருகின்றது.

இதற்கு உறுதுணையாக அப்போ தைய நாடளுமன்ற உறுப்பினர் சம் பந்தன் பேருதவி புரிந்தார்.

அவ்வப்போது பன்குளம் பகுதியில் வாழும் சிங்கள இனவாதிகள், பிக்கு கள், இராணுவ புலனாய்வாளர்கள் ஆகியோரால் கடும் அச்சுறுத்தல் விடுக் கப்பட்டே வந்தது. பன்குளம் பகுதியில் வாழும் தமிழர்களின் நெற்செய்கைக்கு குந்தகம் விளைவிப்பது, அவர்களின் கால்நடைகளை அழிப்பது, தமிழர்களை அடிமைகளாக நடத்த முனைவது போன்ற செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருந்தது.

இந்தப் பகுதியில் இடம் பெறும் சிங்கள - பௌத்த இனவாத நடவடிக் கைகளுக்கு எதிராக , பன்குளம் நாக தம்பிரான் ஆலயத்தினரும் அப்பகுதி தமிழ் மக்களும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த, மூத்த தமிழ்த் தலைவர் சம்பந்தன் மறைந்ததைத் தொடர்ந்து , மீண்டும் சிங்களவர்களின் அட்டகாசம் அதி கரித்தது .

2020-2025 காலப்பகுதிவரை இந்த பகுதியைச் சேர்ந்த 3 பேர் படுகொலை செய்யப்பட்டனர், சிலர் போத்தலால் குத்தப்பட்டு வாய்காலுக்குள் எறியப் பட்டனர்.

கடந்த 6 மாதங்களுக்கிடையில் , இந்த ஆலய மணியகார மரபினர் இரு வர் வீதியில் வாகனத்தால் அடித்து தாக்கப்பட்டனர். இருவரும் இன்றும் உடல் இயங்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தின் சிங்கள எல்லையோர கிராமங்களில் சட்டவாட்சி Rule Of Law கிடையாது .

அரச நிறுவனங்களான பொலிஸ் நிலையம், பிரதேச செயலகம், வைத் தியசாலைகள் என அனைத்தும் பெரும் பான்மையினரின் கட்டுப்பாட்டுக்கு உள்ளன. எங்கு முறையிட்டும் பய னில்லை.

2024/2025 காலப்பகுதியில் நாகதம்பி ரான் ஆலய கோவில் தலைவர் குமார சாமி ஜெயராஜ் குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டமையும் குறிப் பிடத்தக்கது.



# ஹற்றன் நகரை அபிவிருத்தி செய்ய 2026 வரவு - செலவுத் திட்டத்தில் நிதி!

**(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)**

2026 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன் படுத்தி, ஹற்றன் நகரை ஒரு நவீன நகரமாக அபிவிருத்தி செய்யும் பாரிய திட்டத்தின் ஆரம்பகட்ட திட்டமிடல் பணிகள் நேற்று திங்கள்கிழமை ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

33 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை உள்ளடக்கிய இந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல், நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான மஞ்சுள சுரவீர தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி, ஹட்டன் டிக்கோயா நகரசபை தலைவர், நுவரெலியா மாவட்டச் செயலாளர், ஹற்றன் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் உள்ளிட்ட அரச நிறுவ னங்களின் பிரதானிகள் கலந்துகொண டனர்.

திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக, திட்டமிடப்பட்ட அபிவிருத்தி – நகர எல்லைக்குள் உள்ள அரச நிறுவனங்கள் மற்றும் பொது வசதிகளை முறையாக அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான அடிப்படைத் திட்டங்களைத் தயாரித் தல்.

மக்களின் பங்களிப்பு – இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக, அப்பகுதி வர்த்தக சமூகம் மற்றும் பொது மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல

அரச துறையின் தலையீடு – திட் டத்தின் போது எழக்கூடிய சிக்கல்களுக்கு அரச அதிகாரிகளின் ஊடாக விரைவான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வது குறித்து இங்கு ஆராயப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த மஞ்சுள சிரவீர, ஹற்றன் நகரை அபிவிருத்தி செய்வது இப்பகுதி மக்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்த ஒரு விடயமாகும் எனக் குறிப்பிட்டார். இது கட்சி பேதங்களுக்கு அப்பால் பொதுவான நோக்கத்துக்காக முன்னெடுக்கப்படுவதால், எந்தவித தடங்கலுமின்றி வெற்றியளிக்கும் என தாம் நம்புகிறார் என்று தெரிவித்தார்.





# நொந்து போகும் மக்களிடம் சுரண்டும் இடைத் தரகு...!

இலங்கையின் சமூக பொருளாதார அமைப்பில் விவசாயம் மற்றும் நில வளங்கள் மிக முக்கியத்துவமான நிலையைப் பெற்றுள்ளன. நாட்டின் பெரும்பாலான மக்கள் கிராமப் புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது பிரதானமான வாழ்வாதாரமாக விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு என கிராமிய பொருளாதாரம் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன. இத்துறைகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முதுகெலும்பாகச் செயற்பட்டுவருகின்ற அதேவேளை, கிராமப்புறங்களில் உள்ள நீர்வளம் மற்றும் நிலவளம் என்பன விவசாயத்துறைக்கு மட்டுமல்லாது வீடமைப்பு, வணிகச் செயற்பாடுகள் மற்றும் பெருமளவிலான முதலீட்டு நடவடிக்கைகளுக்கும் அடிப்படையான வளமாகக் காணப்படுகின்றன. இவ்வாறு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த வளங்கள் நிறைந்த கிராமப்புறங்களில் தமது முதலீடுகளை மேற்கொள்ளும் நோக்கில் பெரும் முதலாளிகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் கவனம் அதிகமாக ஈர்க்கப்பட்டுவருவதால் குறித்த வளங்களுக்கான கேள்வி அதிகரித்துவருகின்றது.



கிராமப் புறத்தில் வாழும் மக்களுக்கும் நகரப் பகுதிகளைத் தளமாகக் கொண்டு இயக்கிவரும் பெரும் நிறுவனங்கள் மற்றும் தொழிலதிபர்களுக்கும் இடையில் நேரடித்தொடர்புகள் எவையும் இல்லை. இங்கு இருபகுதியினரையும் இணைக்கும் இடைவெளியில் தொடர்பாடல் ஊடகமாக இடைத்தரகர்கள் உள்ளே வருகின்றனர். இவர்கள் சாதாரண இடைத்தொடர்பாளர்களாக உள்ள போதிலும் கிராமிய மக்களின் ஏழ்மை, கல்வியறிவு, கள்ளங்கபடமற்ற அப்பாவித்தனம் மற்றும் கலப்படமற்ற நேர்மைத்தன்மை என்பனவற்றை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு இவ்விரு பகுதியினருக்கும் இடையில் செயற்படும் மிகவும் வலுவான செல்வாக்கைப் பெற்றவர்களாக காணப்படுகின்றனர்.

இடைத்தரகர்கள் விவசாய உற்பத்திகள் முதல் உள்ளூர் சந்தை மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதி வரையிலும், காணி விற்பனை முதல் சட்டரீதியான பதிவுவரை அனைத்திலும்இடைத்தொடர்பாளர்களாக செயற்படுகின்றனர். இவை மட்டுமல்லாது தமிழர்களது பாரம்பரியமான திருமண சடங்குகளுக்கு வரன் பார்ப்பது முதல் திருமணம் வரை அனைத்து நடவடிக்கைகளிலும் இவர்களது செயற்பாடுகள் தவிர்க்கமுடியாத இடத்தைப் பெற்றுள்ளன. இந்தச் செல்வாக்கு சிலசமயங்களில் பயனுள்ளதாக உள்ளபோதிலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் பெரும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவருகின்றன. அந்தவகையில் இடைத்தரகர்களது செயற்பாடுகளால் விவசாயம், மீன்பிடி, காணி விற்பனை மற்றும் திருமண நடவடிக்கைகள் என்பவற்றில் தாக்கம் இருக்கத்தான் செய்கிறது.

முதலில் “தரகு” என்றால் என்ன என்பதை வரைவிலக் கணப்படுத்திக்கொண்டு செல்வதன் மூலமே இடைத்தரகு எனும் பெயரால் இங்கு உண்மையில் என்ன இடம்பெற்று வருகின்றது என்பதை ஐயந்திரிபுற வெளிப்படுத்த முடியும். தரகு என்றால் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தரப்பினரிடையே ஏற்படுத்தப்படக்கூடிய ஒரு உடன்பாட்டின் இறுதி இலக்கை அடைவது வரையில் இடைத்தொடர்பாடல் அல்லது மத்தியஸ்தம் வகித்து குறித்த நடவடிக்கையை வெற்றிகரமாக பூர்த்தியடைய வைக்கும் செயற்பாடாகும். இத்தரகுச் செயற்பாட்டுக்கு இரண்டு தரப்பினரும் மனமுவந்து தாமாக வழங்கிய நன்கொடை அல்லது சன்மானமே தரகுக் கூலியாகக் கருதப்பட்டது.

ஆரம்ப காலங்களில் தரகுச் செயற்பாடுகள் யாவும் வயதுபோனவர்கள், ஊர் பெரியவர்கள் மற்றும் ஓய்வூதியர்களால் சேவை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்ததால் சன்மானமாக வழங்கப்பட்ட நன்கொடைகளை அவர்கள் தமது சேவைக்கான கௌரவமாகக் கருதினர். ஆனால் தற்காலத்தில் உள்ள இடைத்தரகர் என்பது வேறு. அது பணபலம், அரசியல் பலம், அதிகாரபலம் என பெரும்பலம் பெற்ற சக்தியாக அசுர வளர்ச்சியடைந்து நிற்கிறது. தற்காலத்தில் இடைத்தரகின் மூலம் கிடைக்கப் பெறும் அதிகரித்த இலாபங்களால் பலர் இதை ஒரு தொழிலாகவோ அல்லதுபகுதிநேரத்தொழிலாகவோ மேற்கொண்டுவருவதை காணலாம்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் விவசாய இடைத்தரகர்கள், காணி விற்பனை இடைத்தரகர்கள், வியாபார முகவர்கள், திருமணத் தரகர்கள், அரசியல் மற்றும் அதிகாரத்தொடர்பு கொண்ட முகவர்கள் என இடைத்தரகர்கள் பல்பரிமாணம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். விவசாயம், மீன்பிடி, காணிபூமி விற்பனை மற்றும் திருமண ஏற்பாடுகள் என்பன இடைத்தரகர்களின் அதிக செல்வாக்குக்கு உட்பட்ட துறைகளாகக் காணப்படுகின்றன. இடைத்தரகர்களால் குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய சில நன்மைகள் இடம்பெறுகின்றபோதிலும் இவர்களது செயற்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகள் அல்லது எதிர்மறைத் தாக்கங்களே அதிகமாகும். மேலே கூறப்பட்ட துறைகளில் இடைத்தரகர்களின் செல்வாக்கு எந்தளவுக்கும் தீர்மானிக்கும் சக்தியாக ஆளமாக வேரூன்றியுள்ளது என்பதை ஆதாரப்படுத்துவதற்காக துறைசார்ந்து இடம்பெற்றுவரும் சில சம்பவங்களை இங்கே பதிவிடுவது அவசியமாகின்றது.

### விவசாயத்துறையில் இடைத்தரகர்கள்

வெளிநாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டில் உள்ள விவசாயிகள் அனைவருமே சிறிய அளவிலான நிலங்களின் உரிமையாளர்களாக அல்லது குத்தகை அடிப்படையில் எடுக்கப்பட்ட காணிகளில்விவசாயம்செய்பவர்களாகவே உள்ளனர். அவர்களிடம் போதிய சேமிப்பு வசதிகள் இல்லை. போக்குவரத்து வசதிகள் இல்லை அல்லது ஒப்பீட்டளவில் குறைவு, சந்தைகளை நேரடியாக அணுகும் வாய்ப்புக்கள் அல்லது வல்லமை இன்மை, சந்தை விலை நிலவரங்கள் பற்றிய போதிய அறிவு மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் இன்மை, அதீத நேர்மைத்தன்மை போன்ற நிலைப்பாடுகளை தமக்கு சாதகமாக பயன்படுத்தும் இடைத்தரகர்கள், விவசாயிகளிடமிருந்து உற்பத்திப் பொருள்களைக் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்து, நகர்ப்புறங்களில் உள்ள சந்தைகளில் அதிக விலைக்கு விற்பனை செய்வதன்மூலம் பெரும் இலாப மீட்டி வருகின்றனர்.

உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கின்ற போதிலும் அறுவடைகளுக்கான நியாயமான விற்பனை விலை கிடைக்கப்பெறுவதில்லை. இதனால், விவசாயிகள் தமது

தொடர்ச்சி▼

# நொந்து போகும் மக்களிடம் சுரண்டும் இடைத் தரகு...!

**தொடர்ச்சி▲**

உழைப்புக்கு ஏற்ற வருமானத்தைப் பெறமுடியாமல் தவிக்கின்றனர். அதிகளவான விவசாயிகள், கடன்களைப் பெற்று விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதால் பொருளாதார சுயாதீனத்தை இழக்கின்றனர். இதனால் இடைத்தரகர்களில் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. விவசாய உற்பத்திப் பொருள்கள் தொடர்பில் தேவையற்ற பதுக்கல் நடவடிக்கைகள், செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், விலைகளில் ஏற்ற இறக்கம் என அனைத்து செயற்பாடுகளின் பின்னணியிலும் மறைமுகமாக இருந்து செயற்படுபவர்கள் இந்த இடைத்தரகர்களே. இவர்கள் சந்தை விலையைச் செயற்கையாக அதிகரித்தல் மற்றும் சடுதியாக குறைக்கும் வல்லமைபெற்ற சக்தியாக காணப்படுவதுடன் தாம் இலாபம் ஈட்டுவதற்காகவே இவர்கள் இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். இத்தகைய செயற்பாடுகளால் விவசாயிகள் மாத்திரமன்றி நுகர்வோரும் பாதிக்கப்படும் அபாய நிலை ஏற்படுகின்றது.

### சந்தை விலையை எவ்வாறு தீர்மானிக்கின்றனர்

“வாய்ப்புக்காகக் காத்திருக்காதே அதை நீ உருவாக்கு” எனும் வாசகத்தை எமது இளைஞர் யுவதிகள் பின்பற்றுகின்றார்களோ இல்லையோ இடைத்தரகர்கள் இதை தமது தாரகமந்திரமாக செயற்படுத்தி வருகின்றார்கள். அறுவடைகாலத்தில் இலங்கையில் உள்ள பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் முதல் ஒவ்வொரு மாவட்டங்கள் தோறும் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் வரை தமது பொருளாதார வளங்களுக்கு ஏற்ப அனைவரும் நெல் கொள்வனவில் ஈடுபடுவார்கள். ஆனாலும் பணபலம், ஆளணி, வாகனம், மற்றும் பாரிய களஞ்சியங்கள் என்பனவற்றுடன் அரசியல் செல்வாக்கையும் மேலதிக பலமாகக் கொண்டுள்ள குறிப்பிட்ட சில அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லின் விலையைத் தீர்மானித்துத் தாமே அனைத்து நெல்லையும் கொள்வனவு செய்வதற்கான ஒரு ஏற்பாட்டை முன்னெடுக்கின்றனர்.

அறுவடை ஆரம்பிக்கும்போது நெல் கொள்வனவுக்காகப் பல்வேறு தரப்பட்ட அரிசி ஆலை உரிமையாளர்களும் விவசாய நிலங்களை நோக்கி தமது பாரவூர்திகளுடன் வருவார்கள். கொள்வனவு செய்வதற்கு பலர் இருந்தால் நெல்லுக்கான கேள்வி கூடும். அப்போது விவசாயிகள் விலையை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். இங்கே இரண்டு பகுதியினரையும் கட்டுப்படுத்துவதற்காக மேலே குறிப்பிட்ட பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் முதலில் அதிக விலை கொடுத்து நெல்லை கொள்வனவு செய்கிறார்கள். கொள்வனவு செய்யப்படும் விலை விவசாயிகள் மத்தியில் வேகமாக பரவச்செய்யப்படுகின்றது. இதனால் நியாயமான விலைக்கு கொள்வனவு செய்ய முன்வரும் சிறிய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களிடம் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்யமாட்டார்கள். அத்துடன் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அதிஉச்ச விலையைக் கூறி அந்தவிலைக்கு விற்பனை செய்யவுள்ளனர் என்று விவசாயிகள் தெரிவிப்பார்கள். ஆனால், குறித்த அதியுச்ச விலைக்குக் கொள்வனவு செய்து மதிப்புக்கூட்டி தம்மால் அதனை சந்தைப்படுத்த முடியாது எதன்பதால் சிறிய அளவிலான அரிசிஆலை உரிமையாளர்கள் நெல்லை கொள்வனவு செய்யாமல் திரும்புகின்றனர். மறுபுறம் அதிகவிலைக்கு கொள்வனவு செய்த அரிசி ஆலை உரிமையாளரது பாரவூர்திகள் தமது பகுதிக்கு வரும்வரை வீதிகளில் நெல் மூடைகளை அடுக்கிவிட்டு விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

ஆனால் குறிப்பிட்ட பகுதிக்கு மேற்படி அரிசி ஆலையின் பாரவூர்திகள் சிலநாள்களுக்கு வருகை தராது. நல்லவிலைக்கு கொடுக்கலாம் என்று விவசாயிகள் காத்திருக்க எதிர்பாராத விதமாக மழை வருகிறது.

மழையிலே நெல் நனையும் வரை காத்திருக்கும் குறித்த அரிசி ஆலை உரிமையாளர்களது பாரவூர்திகள் இப்போது குறித்த பகுதிகளுக்கு வரும். “நனைந்த நெல், பழுத்தது காணாது, பச்சையா கிடக்குது”, என்று பலகுறைபாடுகளை குறிப்பிடுவதுடன் ஈரத்தோடு எடுப்பது என்றால் இந்தவிலைக்குத்தான் எடுப்பம் என முன்னர் தாங்கள் கொள்வனவு செய்த விலையின் அரைவாசி விலைக்கோ அல்லது அதைவிட சற்று குறைவான ஒரு தொகைக்கு நெல்லை கேட்பார்கள். விற்பதற்கு வேறுயாரும் இல்லாததுடன் அறுவடை செய்தபின் நனைந்த நெல்லை பதப்படுத்தி சேகரித்து வைப்பதற்கு போதிய அளவு உலர்தளங்கள் மற்றும் களஞ்சிய வசதிகள் இல்லாத நிலையில் அவர்கள் கோரும் விலைக்கே நெல்லை விற்பனை செய்யவேண்டிய நிலைக்கு விவசாயி தள்ளப்படுகின்றான்.

மேற்படி செயற்பாடுகள் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. பாரிய அரிசிஆலை முதலாளிகள் ஆரம்பத்தில் அதிக விலைகொடுத்து நெல் கொள்வனவு செய்வதன் மூலம் நெல்லுக்கான கேள்வி ஆதிகரித்துள்ளது போன்ற ஒரு நிலைப்பாட்டை உருவாக்கி அச்செய்தியை விவசாயிகளிடம் திட்டமிட்டு பரப்புவதன் ஊடாக சந்தையில் நிரம்பல் அதிகரிகச் செய்யப்படும் அதேவேளை, அதிக விலைக்குக் கொள்வனவு செய்வதன் மூலம் தமது போட்டியாளர்களையும் சந்தையிலிருந்து அப்புறப்படுத்துகின்றார்கள். இதனால் சந்தையில் கேள்வி குறைவடைகின்றது. இந்த நிலையில் இயற்கையும் அவர்களுக்கு சாதகமாகிவிடுவதால் தாம் தீர்மானிக்கும் விலைக்கு மிகவும் மலிவாக நெல்லை கொள்வனவு செய்கிறார்கள்.

வருடாவருடம் இது நடைபெறுக்கொண்டுதான் இருக்கிறது. அறுவடைகாலத்தின் ஆரம்பத்தில் நெல்லை அதிக விலைகொடுத்து கொள்வனவு செய்யப்படும் நடைமுறையும் அதற்குப் பின்னால் உள்ள கபடத்தனமான இலாப நோக்கத்தையும் ஆளமான பார்வையின்றி அறியமுடியாது. இதை வியாபாரத் தந்திரம் என எண்ணி அவர்கள் பெருமைப்படக்கூடும். உண்மையில் இது ஒரு மாபெரும் சுரண்டல்.

அறுவடை ஆரம்பித்து மூன்று அல்லது நான்குவார காலங்களின் பின்னரே நெல் கொள்வனவு செய்வதற்கான கட்டுப்பாட்டுவிலை அரசால் அறிவிக்கப்பட்டுவருகிறது. அரசால் கட்டுப்பாட்டுவிலை அறிவிக்கப்பட்டு வருகின்றபோதிலும் கூட்டுறவுத் திணைக்களங்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை தவிர நெல்லை கொள்வனவு செய்வதற்கான வேறெந்தப் பொறிமுறைகளும் அரசாங்கத்தால் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. அரச விதை உற்பத்திப் பண்ணைகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட பண்ணையாளர்களிடம் இருந்து விதை நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது.

அறுவடைசெய்யப்படும் நெல்லைத் தமக்கான வருடாந்த ஒதுக்கீட்டைத் தாண்டிக் கொள்வனவு செய்யமுடியாத வரையறையும் இந்நிறுவனங்களுக்கு உண்டு. அது மாத்திரமன்றி அறுவடை செய்யப்பட்ட நெல் களஞ்சியப்படுத்தவதற்கு ஏற்ற 13 வீத உள்ள நெல்லையே இவர்களால் கொள்வனவு செய்யமுடியும். இவ்வாறு வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்குள் செயற்படுவதால் குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் நெல் முழுவதையும் கொள்வனவு செய்யும் ஆற்றல் கூட்டுறவு திணைக்களங்களிடமோ அல்லது நெல்சந்தைப்படுத்தும்சபையிடமோ இல்லை என்பதே கசப்பான உண்மை.

கட்டுப்பாட்டு விலை ஒரு மூடை நெல்லுக்கானதாகவே அறிவிக்கப்படுகின்றது. ஆனால் ஒரு மூடை நெல்லின் எடை எத்தனை கிலோ கிராம் என அரசால் வரையறுக்கப்படுவதில்லை. தென்பகுதிகளில் ஒரு மூடை நெல் 65 கிலோவாகவும், கிழக்கு மாகாணத்தில் 70 கிலோ தொடக்கம் 72 கிலோவாகவும் வடபகுதிகளில் பொதுவாக 72 கிலோ முதல் 7 கிலோ

தொடர்ச்சி▼

# நொந்து போகும் மக்களிடம் சுரண்டும் இடைத் தரகு...!

**தொடர்ச்சி▲**

வரை கணக்கிடுகின்றார்கள். இந்த நிறையை வியாபாரியே தீர்மானிக்கின்றார்.

கட்டுப்பாட்டு விலைக்கு கொள்வனவுசெய்வதற்கு யாரும் முன்வராதநிலையில் குறித்த அரிசி ஆலை முதலாளிகள் தமது முகவர்கள் மூலம் கட்டுப்பாட்டு விலையைவிடக் குறைந்த விலைக்கு இரகசியமான முறையில் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றன. கடன் பெற்று வயல் விதைத்த விவசாயி, அறுவடை செய்த பின்னர் எப்பாடு பட்டாவது தான் பெற்ற கடனை அடைப்பதையே பிரதான கடமையாக கருதுகிறான். இந்த நிலையில் தனது கடனை அடைப்பதற்காக இடைத்தரகர்களில் தங்கியிருக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றான்.

### சிறுதானியச் செய்கையில் இடைத்தரகு

இடைத்தரகர்களது செயற்பாடுகள் சிறுதானியச் செய்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராயும்போது உழுந்து பயிர்ச்செய்கையில் வருடாந்தம் ஈடுபடும் விவசாயி ஒருவர் தனது அனுபவத்தைப் பகிர்ந்தபோது கூறிய விடயங்களை இங்கே தருகின்றேன். “கடந்த ஐந்து வருடங்களுக்குள் உள்ள நிலவரப்படி நாங்கள் விதை உழுந்து கொள்வனவு செய்யும்போது வருடாந்தம் அண்ணளவாக ஒரு கிலோ உழுந்து 1000 ரூபாவுக்கே கொள்வனவு செய்துவருகிறோம். நுகர்வோரின் உணவுத்தேவைக்காக வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படும் உழுந்து தொள்ளாயிரம் முதல் ஆயிரத்து இருநூறு ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுவருகின்றது. ஆனால் அறுவடைகாலத்தில் எமது அறுவடைகளை விற்பனை செய்யும்போது 200 முதல் 350 ரூபா வரையே விற்பனை செய்யக் கூடியதாக உள்ளது.

உற்பத்தி செலவுகள் அதிகரித்துள்ளதுடன் நோய் தாக்கங்கள் இயற்கை பேரிடர்கள் என விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்கள் அதிகம். அதேபோன்று பெருந்தொகையான தானியங்களை கொள்வனவுசெய்து களஞ்சியப் படுத்தி வைத்திருப்பதன் மூலம் வர்த்தகருக்கும் நட்டங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. சிறுதானிய செய்கை மற்றும் விற்பனையில் நேரடியாக பாதிக்கப்படுவது விசாயிகளும் வர்த்தகர்களும் தான். ஆனால் வர்த்தகர்களுக்கு போதிய இலாபமோ விவசாயகளுக்கு நியாயமான விலையோ கிடைப்பதில்லை. இருவருக்கும் இடையில் இருக்கும் தரகர்கள் குறைந்தவிலைக்கு கொள்வனவு செய்துவிட்டு அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். இதனால் சந்தைவிலை குறைவடைவதுமில்லை. விவசாயிக்கு நியாயமான வருமானம் கிடைப்பதுமில்லை.

### மரக்கறிப் பயிர்ச்செய்கையில் இடைத்தரகு

நெற்செய்கை மற்றும் சிறுதானியச் செய்கைகள் போன்று மரக்கறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளும் இடைத்தரகர்களது செயற்பாடுகளால் பல இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். சந்தை விலை நிலவரங்கள் தொடர்பில் அறியாத பாமர விவசாயிகள் அல்லது சந்தைக்கு தமது அறுவடைகளை எடுத்துச்செல்வதற்கான போக்குவரத்து வசதிகளற்ற கிராமப்புறங்களில் உள்ள தோட்டங்களுக்கு செல்லும் இடைத்தரகர்கள் மரக்கறியை கொள்வனவு செய்யும் போது மிகக் குறைந்த விலைக்கே கொள்வனவு செய்கின்றனர். அத்துடன் எழுதப்படாத விதிகளையும் இவர்கள் நடைமுறைப் படுத்துகின்றனர். 10 கிலோவுக்கு ஒரு கிலோ கழிவு எனும் நிபந்தனையுடனேயே மரக்கறிகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. உதாரணமாக 500 கிலோ கத்தரிக்காயை விற்பனை செய்யும் ஒரு விவசாயி 10:1 கழிவு எனும் எழுதப்படாத விதிக்குக் கட்டுப்பட்டு 50 கிலோ கத்தரிக்காயை இலவசமாக வழங்கவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றான். கடந்தசில வாரங்களாக மரக்கறி விலை அதிகரித்திருந்தமை யாவரும் அறிந்ததே. 800 முதல் 1000 ரூபா வரை விற்பனை செய்யப் பட்டபோதிலும் அதிகளவான விவசாயிகள் தங்களது தோட்டத்துக்கு வருகைதந்து கொள்வனவு செய்தவர்களிடம் 200 ரூபா முதல் அதிகபட்சம் 320 ரூபாவரையே விற்பனை செய்ததாக கூறினர் விவசாயிக்கு நியாயமான விலையும் இல்லை. நிறுவையிலும் மேலதிகமாக வழங்கவேண்டிய நிலையே காணப்படுகிறது.

### கால்நடைவளர்ப்பில் இடைத்தரகு

விவசாயத்துறைபோன்று கால்நடைவளர்ப்போரும் இடைத்தரகர்களால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இறைச்சி விற்பனையில் உரித்த இறைச்சியாகவும், உயிர் எடையாகவும் விற்பனை செய்யும் நடைமுறை உள்ளது. உயிரெடை எனும் போது தனி இறைச்சியின் விலையை விட சற்றுக் குறைவாகவே விற்பனை செய்யப்படும். உயிரெடை எனும்போது வரக்கூடிய கழிவுகளையும் கருத்தில் கொண்டே விலை தீர்மானிக்கப்படுகின்றது. இதனால் விற்பனை செய்யும் பண்ணையாளரோ அல்லது கொள்வனவு செய்பவரோ பெருமளவில் பாதிக்கப்படமாட்டார்கள். ஒரு நிகழ்வுக்காக இறைச்சி கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர் இறைச்சிக்காக அவர் செலவிட உத்தேசித்த தொகைக்கு கொள்வனவு செய்யக்கூடிய இறைச்சியைவிட உயிர் எடைக்கு எடுப்பதன் மூலம் அதிகமாக இறைச்சியை பெறக்கூடியதாக இருக்கும் என்பதால் பெரும் சமயல்களின்போது பொது மக்கள் உயிரெடைக்கே கொள்வனவு செய்கின்றனர். வியாபார நோக் கத்துக்காகக் கால்நடைகளை கொள்வனவு செய்யும் இடைத்தரகர்கள் உயிரெடைக்கு கொள்வனவு செய்யும் அதேவேளை தோல், தலை, குடல் மற்றும் கால் என குறிப்பிட்டு அதற்கு மொத்தநிறை யில் குறிப்பிட்ட ஒரு நிறையினை கழிவு என குறிப்பிட்டு மொத்த நிறையிலிருந்து கழிப்பனவாக கழித்தே கொள்வனவு செய்கின்றார் கள். இதனால் கிராமப்பபுறங்களில் உள்ள சிறிய அளவிலான பண்ணையாளர்கள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்தமுடியாத நிலையில் இவர்கள் போடும் எழுதப்படாத சட்டங்களுக்கு கட்டுப்பட்டே தமது உற்பத்திகளை விற்பனை செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

உண்மையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் இடைத்தரகர்கள் கிராமிய பொருளாதாரத்தை நகர்ப்புற சந்தைகளுக்கு இட்டுச்செல்லல், வெளிநாட்டு ஏற்றுமதிகள் என்பன வற்றுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், கிராமப்புறங்களை நோக்கி அபிவிருத்திப் பணிகளை கொண்டுசெல்லல் வெளிநாடுகளில் உள்ளவர்களுடன் கிராமிய மக்களையும் இணைத்து பொருளாதாரத்தில் வளர்ச்சியடைய செய்கின்றனர். எனினும் இடைத்தரகு எனும் நிலையில் இருந்துகொண்டு தங்களை தவிர்த்து விட்டு எதையும் செய்யமுடியாது, தங்களூடாகவே அனைத்து தொடர்பாடல்களும் நடக்கவேண்டும் எனும் தவிர்க்கமுடியாத நிலையை உருவாக்கி விலையை தீர்மானிக்கும் சக்தியாக செயற்படும் நிலை உடனடியாக மாற்றப்படவேண்டும். தரகுக்கு நியாயமான கூலி கொடுப்பதில் விவசாயிகளோ பண்ணையாளர்களோபின்நிற்கப்போவதில்லை. மாறாக எந்தவொரு கஸ்ரமும் இல்லாமல் பொருள்களையும் சேவைகளையும் கைமாற்றுவதற்காக ஏழ்மை மற்றும் இயலாமையை அடிப்படையாக வைத்து தமது இலாபத்தை மட்டும் முதன்மைப்படுத்தி செயற்படுவது மாபெரும் சுரண்டலாகும். இதனால் விவசாயி மாத்திரமல்லாது, நுகர்வோரும் பாதிக்கப்படுகின்றனர். இது உடனடியாக நிறுத்தப்படல்வேண்டும்.

விவசாயத்தறையை அரசாங்கம் நன்கு அபிவிருத்திசெய்ய முன்வரவேண்டும். முதலில் டித்வா புயலின் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தவேண்டும்.

**எம்.சீ.எல்.வளவன்,**
**ஊடகத்துறை மாணவன்,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

# பல்கலாச்சாரப் பின்னணியில் உளநலம்...!

மனித வாழ்வின் தரத்தை நிர்ணயிக்கும் முக்கிய கூறுகளில் உளநலம் மிக முக்கியமானதாகும். உடல்நலம் போன்று வெளிப்படையாகக் காண முடியாவிட்டாலும் மனிதனின் சிந்தனை, உணர்ச்சி, நடத்தைகள் மற்றும் சமூக உறவுகள் அனைத்தையும் வழிநடத்துவது உளநலமே.

இன்றைய உலகம் மொழி, மதம், இனத்துவம், மரபு, வாழ்வியல் முறை எனப் பல்வேறு அடையாளங்கள் கலந்த ஒரு பல்கலாச்சாரச் சமூகமாக உருவெடுத்து வரும் நிலையில், உளநலத்தை தனிநபரின் பிரச்சினையாக மட்டும் பார்ப்பது போதுமானதல்ல. ஒருவர் வாழும் கலாச்சாரச் சூழலே அவரின் மனநிலையின் அடிப்படை வடிவத்தை உருவாக்குகிறது.

ஒவ்வொரு கலாச்சாரமும் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் விதத்திலும், அவற்றை வெளிப்படுத்தும் முறையிலும் தனித்துவம் கொண்டது. சில சமூகங்களில் மனவேதனையை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்வது ஆரோக்கியமான செயல் எனக் கருதப்படுகிறது. ஆனால் ஏனைய சில கலாச்சாரங்களில் அதையே பலவீனமாகப் பார்க்கும் மனப்பாங்கு நிலவுகிறது. உதாரணமாக, பாரம்பரிய குடும்ப அமைப்பில் வளர்ந்த ஒருவருக்கு மனச்சோர்வு அல்லது கவலை ஏற்பட்டாலும், அதை வெளியில் சொல்லாமல் "பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்ற எண்ணமே மேலோங்குகிறது. குடும்பத்தின் மரியாதை, சமூகத்தின் பார்வை ஆகியவை அவரின் உள்வேதனையை மறைக்கச் செய்கின்றன. இவ்வாறு ஒடுக்கப்பட்ட உணர்ச்சிகள் காலப்போக்கில் தீவிரமான உளநலப் பிரச்சினைகளாக மாறும் அபாயம் உள்ளது.

பல்கலாச்சாரச் சூழலில் வாழும் நபர்களுக்கு இந்தச் சவால் இன்னும் அதிகமாகிறது. ஒரு நாட்டில் பிறந்து, வேறு நாட்டின் கலாச்சாரத்தில் வாழும் ஒருவர், இரண்டு விதமான மதிப்பீடுகளுக்கு இடையில் சிக்கிக் கொள்கிறார். வீட்டில் வளர்ந்த கலாச்சாரம் மனதை அடக்கி வைக்கச் சொல்கிறது. வெளிச் சமூக கலாச்சாரம் மனதைப் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கிறது. இந்த இரட்டை அடையாள நிலை (dual identity) பல நேரங்களில் மனக்குழப்பம், தனிமை மற்றும் அடையாளச் சிக்கலை ஏற்படுத்துகிறது.

உதவி தேட வேண்டிய நேரத்தில் கூட "என் கலாச்சாரத்துக்கு இது சரியா?" என்ற கேள்வி அவரைத் தடுத்துவிடுகிறது. இந்த நிலைக்கு மேலும் சவாலாக அமையுவது மொழித் தடைகள் மற்றும் பாகுபாடு அனுபவங்களாகும். தன் மன வேதனையை துல்லியமாக வெளிப்படுத்த முடியாத மொழிச் சூழல், சிகிச்சை தேடும் மனநிலையைத் தளர்த்துகிறது.



சரண்யா பாலகுமார்,
உளவியல் துறை சிறப்பு கலை,
யாழ். பல்கலைக்கழகம்,

குறிப்பாக குடிபெயர்ந்த சமூகங்களில், இனவெறி, ஒதுக்கல், கேலி போன்ற அனுபவங்கள் தொடர்ச்சியாக நிகழும்போது, அவை ஒருவரின் தன்னம்பிக்கையைச் சிதைத்து, மனச்சோர்வு, பதற்றம் மற்றும் மனஅழுத்தம் போன்ற உளநலப் பிரச்சினைகளை அதிகரிக்கின்றன. இவை தனிநபரின் தோல்வியாக அல்ல, சமூகத்தின் பொறுப்பின்மையாகவே பார்க்கப்பட வேண்டும்.

உளநல சிகிச்சை வழங்கும் சூழலிலும் கலாச்சார வேறுபாடுகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஒரே சிகிச்சை முறை எல்லா மனிதர்களுக்கும் பொருந்தும் என்ற எண்ணம் பல்கலாச்சாரச் சூழலில் தோல்வியடைகிறது. சில சமூகங்களில் மனநலப் பிரச்சினைகள் மருத்துவக் கோணத்தில் பார்க்கப்படாமல், ஆன்மீக அல்லது விதியியல் காரணங்களோடு இணைக்கப்படுகின்றன. அத்தகைய நம்பிக்கைகளுடன் வாழும் ஒருவரிடம் கலாச்சாரத்தைப் புறக்கணித்து அணுகும் சிகிச்சை பயனளிக்காது. மாறாக, அந்த நபரின் நம்பிக்கைகள், குடும்ப அமைப்பு மற்றும் சமூக பின்னணியைப் புரிந்து கொண்டு, அவற்றை மதித்து, அறிவியல் விளக்கத்தோடு இணைக்கும் கலாச்சார உணர்வுள்ள அணுகுமுறையே உண்மையான குணமடைவுக்கு வழிவகுக்கும்.

இருப்பினும், பல்கலாச்சாரம் என்பது உளநலத்துக்குச் சவாலாக மட்டுமல்ல அது ஒரு வலுவான வாய்ப்பாகவும் அமைகிறது. பல்வேறு கலாச்சார அனுபவங்கள் ஒருவருக்கு மனநிலை நெகிழ்வையும், வாழ்க்கையை பல கோணங்களில் புரிந்து கொள்ளும் திறனையும் அளிக்கின்றன. வெவ்வேறு சூழல்களில் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் திறன், மனவலிமையை (resilience) வளர்க்கிறது. வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு, கருணை மற்றும் புரிதலை அதிகரித்து, உளநலத்தை உறுதிப்படுத்தும் அடித்தளமாக அமைகிறது.



இன்றைய சமூகத்தில் பல்கலாச்சாரச் சூழலில் உளநலத்தை பாதுகாப்பது தனிநபரின் பொறுப்பாக மட்டுமல்ல. கல்வி நிறுவனங்கள், பணியிடங்கள், ஊடகங்கள் மற்றும் சமூக அமைப்புகள் அனைத்தும் கலாச்சார உணர்வுடன் கூடிய உளநல விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரி நிலைகளிலேயே உளநலம் குறித்து திறந்த உரையாடல்களை ஊக்குவிப்பதும், ஊடகங்கள் மனநலத்தை பொறுப்புடனும் மனிதநேயத்துடனும் எடுத்துரைப்பதும் சமூக மாற்றத்துக்கு அடித்தளமாக அமையும்.

பல்கலாச்சாரப் பின்னணியில் உளநலம் என்பது மனிதன் தன் அடையாளத்தோடு மதிக்கப்படும் போது மட்டுமே மலரக்கூடிய ஒன்றாகும். உளநலம் என்பது ஒரே மாதிரி மனநிலை அல்ல. அது பல்வேறு அனுபவங்களின் இசைவு. வேறுபாடுகளை ஒதுக்காமல், அவற்றைப் புரிந்து கொண்டு, கருணையுடன் அணுகும் சமூகமே உண்மையில் மனநல ஆரோக்கியம் பெற்ற சமூகமாகும். இத்தகைய சமூகத்தை உருவாக்குவதே இன்றைய உலகின் முக்கியமான மனிதப் பொறுப்பாகும்.



# யாழ்ப்பாணத்து இளைய சமுதாயம்: திசைமாறும் தேசத்தின் தூண்கள்?

## ஒரு சமூகப் பார்வை

**பவதாரணி குலேந்திரநாதன்,**
**ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

யாழ்ப்பாணம் என்றாலே ஒரு காலத்தில் நினைவுக்கு வருவது அதன் கல்விப் பாரம்பரியமும் ஒழுக்க விழுமியங்களும்தான். ஆனால், இன்றைய யாழ்ப்பாணத்து வீதிகளில் உலாவரும் இளைஞர்களின் முகங்களில் அந்தப் பழைய அமைதியைக் காண்பது அரிதாகியுள்ளது. போருக்குப் பிந்தைய தசாப்தத்தில், யாழ்ப்பாணத்து இளைய சமுதாயம் ஒரு பாரிய சமூக மாற்றத்துக்கும் சவால்களுக்குள்ளும் தள்ளப்பட்டுள்ளது.

### போதை எனும் சிலந்தி வலை

இன்று யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவியிருக்கும் மிகப்பெரிய புற்றுநோய் 'போதைப் பொருள்'. ஐஸ் முதல் கஞ்சாவரை பலவிதமான போதைப் பொருள்கள் பாடசாலை மாணவர்கள் வரை ஊடுருவியிருப்பது வேதனைக்குரியது. இளைஞர்களின், மாணவர்களின் ஆற்றலை மழுங்கடித்து, அவர்களைச் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட வைக்கும் ஒரு கருவியாக இது மாறியுள்ளது.

### வேலையின்மையும் புலம்பெயர் கனவும்

பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்றும், தகுதிக்கேற்ற வேலைவாய்ப்புகள் இல்லாத சூழல், இளைஞர்களிடையே பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் உழைப்பின் மீதான பிடிப்பு குறைந்து, எப்படியாவது வெளிநாடு சென்றுவிட வேண்டும் என்ற "புலம்பெயர் கனவு" அவர்களின் கல்வியில் இருக்கும் ஆர்வத்தைக் குறைத்துள்ளது. இது மண்ணின் மனிதவளத்தைச் சுரண்டும் ஒரு போக்காக மாறியுள்ளது.

இந்தப் புலம்பெயர் கனவு எத்தகை பேருக்குக் கைகூடும் என்று ஒருகணம் எண்ணிப்பார்க்க அவர்கள் தவறிவிடுகின்றனர். இந்தக் கனவில் அவர்கள் மிதந்துகொண்டு காலத்தை வீணடிக்கிறார்களே தவிர, சொந்த மண்ணில் காலூன்ற அவர்கள் விரும்புவதில்லை.

### சமூக ஊடக மாயையும் கலாசாரச் சிதைவும்

நவீன தொழில்நுட்பம் வரப்பிரசாதம் என்றாலும், அதன் தவறான பயன்பாடு இளைஞர்களை வழிதவறச் செய்கிறது. டிக்டொக் (TikTok) கலாசாரம் மற்றும் சமூக ஊடகங்களில் தங்களை முன்னிலைப்படுத்தும் மோகம் இன்று இளைஞர் மத்தியில் அதிகரித்துள்ளது. இன்றைய இளைஞர் சமூகம் "Tiktok reels" என்ற மாய வலைக்குள் சிக்கி உள்ளதோடு தேவையற்ற குழு மோதல்களுக்கும் (Gangs) வன்முறைகளுக்கும் வித்திடுகிறது.

யாழ்ப்பாணத்தின் தனித்துவமான கலாசார அடையாளங்கள் சிதைந்து போவதற்கு இந்த அந்நியக் கலாசாரத் தாக்கம் முக்கிய காரணமாகின்றது என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

இதற்கான தீர்வு யாரிடம் உள்ளது? என்று நோக்கினால், இந்தச் சிக்கல்களில் இருந்து இளைய சமுதாயத்தை மீட்டெடுக்க வேண்டியது வெறும் பொலிஸாரின் அல்லது சட்டத்தின் கடமை மட்டுமல்ல. பெற்றோரின் கண்காணிப்பும்தான். பிள்ளைகளின் நண்பர்கள் வட்டம் மற்றும் அவர்களின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் கவனிக்க வேண்டியது பெற்றோரின் கடமை. கல்வி நிறுவனங்களும் இந்த விடயத்தில் பங்கு வகித்தல் வேண்டும். அதாவது பாடத்திட்டங்களைத் தாண்டி, வாழ்வியல் விழுமியங்களையும் போதைப்பொருள் ஒழிப்புப் பாடங்களையும் போதித்தல் வேண்டும். போதையால் ஏற்படுத் சமூகச் சீரழிவுகள் தொடர்பிலும் விளங்கப்படுத்துதல் வேண்டும்.

சமூக அமைப்புகள் மூலமாக இளைஞர்களுக்கான விளையாட்டு, கலை மற்றும் ஆக்கபூர்வமான விவாத மேடைகளை உருவாக்கித் தருதல் கூட மாணவர்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறாக இளைஞர்கள் என்பவர்கள் வெறும் வாக்காளர்கள் மட்டுமல்ல; அவர்கள் ஒரு தேசத்தின் உயிர்நாடி. இன்று யாழ்ப்பாணத்து வீதிகளில் போதைக்கும் வன்முறைக்கும் இரையாகும் ஒவ்வொரு இளைஞனும் ஏதோ ஒரு தாயின் பிள்ளை, ஒரு குடும்பத்தின் நம்பிக்கை. இவர்களைத் தண்டிப்பதை விட, அரவணைத்து நல்வழிப்படுத்துவதே சமூகத்தின் முதன்மைப் பணி.

காலம் கடந்து கண்ணீர் சிந்துவதை விட, இப்போதே விழித்துக்கொள்வது அவசியம். நம் வீட்டுப் பிள்ளைகளை நாம் நேசிக்கத் தொடங்கினால், அந்நியச் சக்திகள் அவர்களை ஆக்கிரமிக்க முடியாது.

யாழ்ப்பாணத்தின் மகுடமான 'கல்வி' மீண்டும் அந்த இளைஞர்களின் கைகளில் ஏந்தப்பட வேண்டும். அப்போதுதான் நூலகங்கள் எரிந்தாலும், நம் அறிவுப் பாரம்பரியம் அழியாமல் தொடரும். யாழ்ப்பாணத்தின் எதிர்காலம் என்பது வெறும் கட்டடங்களிலோ அல்லது வீதிகளிலோ இல்லை; அது நம் இளைஞர்களின் கைகளிலேயே உள்ளது. திசைமாறிப் போகும் இத்தூண்களைச் சரியாக நட்டு வைத்தால் மட்டுமே, யாழ்ப்பாணம் மீண்டும் ஒரு அறிவுசார் சமூகமாக மிளிர முடியும். இளைய சமுதாயத்தை நோக்கி நாம் நீட்டும் ஒவ்வொரு உதவிக்கரமும், ஒரு தேசத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திடும்.

"நாளை நமதே எனும் நம்பிக்கை நிஜமாகுமா?"

# உலகத்தை செழிப்பாக மாற்றும் இந்தியா; ஐரோப்பிய ஆணையத் தலைவர் தெரிவிப்பு



வெற்றிகரமான இந்தியா உலகை அதிக நிலைத்தன்மை கொண்டதாகவும் செழிப்பானதாகவும் மாற்றுகிறது என ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா வான்டெர் லேயன் தெரிவித்துள்ளார்.

இந்திய குடியரசு தின விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்க வெளிநாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பது வழக்கம். அந்த வகையில் மத்திய அரசின் அழைப்பை ஏற்று 77 ஆவது குடியரசு தின விழா வில் பங்கேற்பதற்காக, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான்டெர் லேயன், ஐரோப்பிய கவுன் சில் தலைவர் அந்தோனியோ கோஸ்டா ஆகிய இருவரும் 3 நாள் பயண மாக டில்லி சென்றுள்ளார். அவர்கள் இருவரும் டில்லியில் நேற்று நடை பெற்ற குடியரசு தின விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்றனர்.

இந்தியாவுக்கும் 27 நாடுகளை உறுப் பினராகக் கொண்ட ஐரோப்பிய யூனி யனுக்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை கடந்த 2007 ஆம் ஆண்டு தொடங்கியது. எனினும் 2013 இல் பேச்சுவார்த்தை தடைபட்டது. இந்நிலையில் 2022 ஆம் ஆண்டு மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கி யது. இந்த ஒப்பந்தம் இப்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில், ஐரோப்பிய யூனி யன், இந்தியா உச்சி மாநாடு இன்று டெல்லியில் நடைபெற உள்ளது. இதில் உர்சுலா வான் டெர்லேயன், பிரதமர் மோடி உள்ளிட்டோர் பங்கேற்க உள்ள னர். இதில் இருதரப்புக்கும் இடையி லான வரலாற்று சிறப்பு மிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், எக்ஸ் தளத்தில் உர்சுலா வெளியிட்ட பதிவில்,

“இந்திய குடியரசு தின விழாவில் பங்கேற்றது என் வாழ்நாளில் கிடைத்த கவுரவம். வெற்றி நடைபோடும் இந் தியா, உலகை அதிக நிலைத்தன்மை கொண்டதாகவும், வளமானதாகவும், பாதுகாப்பானதாகவும் மாற்றுகிறது. இதன் மூலம் நாம் அனைவரும் பயனடைவோம்.” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்தியா வருவதற்கு முன்பு வான் டெர் லேயன் கூறும்போது,

“இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் விளிம்பில் உள்ளன. இந்த ஒப்பந்தம் 200 கோடி மக்களைக் கொண்ட ஒரு மாபெரும் சந்தையை உருவாக்கும். இது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட நான் கில் ஒரு பங்கைக் கொண்டிருக்கும்.” என்று குறிப்பிட்டிருந்தார்.

# இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலம் தமிழகம்

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்



இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் தமிழகம் தான் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித் துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி திருமலைசமுத்திரம் பகுதியில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நேற்று நடைபெற்றது. தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி தலைமை வகித்தார்.

மாநாட்டில் முதல்வரும் தி.மு.க. தலை வருமான மு.க.ஸ்டாலின் உரையாற்று கையில்,

“அண்மையில் தமிழகம் வந்த பிரதமர் மோடி ஏராளமான பொய்களைச் சொல்லி உள்ளார். உலக வரைபடத்தில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் சென்றுவிட்டு, கனிமொழி சொல்வது போல தேர்தல் சீசனில் மட்டும் தமிழகத்துக்கு வருகிறார். பிரதமர் வருவதற்கு முன்பு 2 கேள்வி களை முன் வைத்தேன். ஆனால் அவர் எதற்கும் பதில் சொல்லாமல் வழக்கம் போல பழைய கன்டென்டையே பேசி விட்டு, பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என நமக்கு புது ‘கன்டென்ட்டை’ கொடுத் துள்ளார்.

ஆனால், இந்தியாவிலேயே பெண் களுக்குப் பாதுகாப்பான மாநிலம் இந்த தமிழகம் தான் என அடித்துச் சொல்கி றேன். மணிப்பூரில் 3 ஆண்டுகளாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பா.ஜ.க. தான் மணிப்பூரை ஆட்சி செய்தது. மத்தியில், மாநிலத்தில் என ‘டபுள் இன்ஜின்’ ஓட்டியவர்கள் ஏன் மணிப் பூர் மக்களை காப்பாற்றவில்லை? ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் பா.ஜ.க. ஆளும் மணிப்பூர், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து தான் போதைப் பொருள்கள் செல்கிறது. இதையெல்லாம் மறைத்துவிட்டு தமிழ கத்தின் மீது அவதூறு பரப்பாதீர்கள்.

தமிழகத்தில் ஏதோ புதிதாக கூட்ட ணியை அமைப்பது போல தோளை உயர்த்திக் காட்டுகின்றனர். தோல்வியுற்ற கூட்டணியை புதுப்பித்துவிட்டு அதற்கு ‘பில்டப்’ கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெ னவே இதே பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட் டணி 2019, 2021 தேர்தல்களில் தோல்வி யுற்றது. 2024 தேர்தலில் பா.ஜ.க. என்ற ‘வேஸ்ட் லக்கேஜை’ அ.தி.மு.க. கழற்றி விட்டு, பிறகு சேர்ந்து கொள்ளலாம் என மறைமுகக் கூட்டணியாக நின்றனர். எத் தனை ‘கெட்அப்’ மாற்றினாலும் தே.ஜ கூட்டணிக்கு மக்கள் ‘கெட் அவுட்’ தான் கூறுவார்கள்.

பா.ஜ.கவின் கட்டாயத்தால், மிரட்டல் உருட்டலால் உருவான பிளாக் மெயில் கூட்டணி தான் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி. உண்மையான அ.தி.மு.க. தொண்டர்களின் விருப்பத்துக்கு எதிராக அமித் ஷாவால் திணிக்கப்பட்ட, பல வழக்குகளிலிருந்து தன்னை காப்பாற் றிக் கொள்ள தன்னுடைய பதவியை தக்க வைக்க பழனிசாமி உருவாக்கிய சுயநலக் கூட்டணி. வரும் சட்டப்பேரவைத் தேர்த லில் தே.ஜ கூட்டணிக்கு எதிர் தி.மு.க. கிடையாது. தே.ஜ கூட்டணிக்கு எதிர் தமிழ்நாடு தான் என்பதை மறந்து விடாதீர்கள். திமுக கூட்டணிக்கு மீண்டும் வெற்றியை தர மக்கள் தயாராகிவிட்ட னர்.” என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் பனிப்புயல் 25 பேர் பலி; விமானங்கள் ரத்து





அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் பனிப்புயல் பாதிப்பு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. ஆர்கன்சஸ் முதல் நியூ இங்கிலாந்து பகுதி வரை சுமார் 2,100 கிலோ மீற்றர் பரப்பளவுக்கு சுமார் 1 அடி உயரத்துக்கு பனி சூழ்ந்துள்ளது. இதனால் வீதி மற்றும் வான் போக்குவரத்து முடங்கியுள்ளது.

இந்த பகுதியில் மின் வசதியின்றி கடும்குளிரான சூழலில் மக்கள் தவித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

பனிப்பொழிவால் மின் கம்பங்கள் மற்றும் மின்சாரத்தை கடத்தும் கம்பிகள் சேதமடைந்துள்ளன என மின்தடை குறித்து தகவல் அளிக்கும் poweroutage.com தெரிவித்துள்ளது.

பனிப்புயல் காரணமாக சுமார் 25 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் கிடைத்துள்ளது. இதில் சுமார் 8 பேர் வீட்டை விட்டு வெளியில் வந்திருந்த போது உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பிட்ஸ்பர்க் பகுதியின் வடக்கே மைனஸ் 31 டிகிரி செல்சியஸ் என்ற சூழல் நிலவுவதாக அந்நாட்டின் தேசிய வானிலை சேவை மையம் தெரிவித்துள்ளது.

ஓஹியோ, டெக்சாஸ், மாசசூசெட்ஸ், மிசிசிப்பி, டென்னசி உள்ளிட்ட பகுதிகளிலும் பனிப்புயல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த 1994 ஆம் ஆண்டுக்கு பிறகு மிக மோசமான பனிப்புயல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. போர்வை, குடிநீர் மற்றும் ஜெனரேட்டர்களுடன் பனியின் தாக்கம் அதிகம் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள பாதுகாப்பு நிலையங்களுக்கு அதிகாரிகள் சென்றுள்ளதாகத் தகவல்.

மோசமான வானிலை காரணமாக அமெரிக்கா முழுவதும் சுமார் 8,000 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று மட்டும் சுமார் 45 சதவீத விமான சேவைகள் ரத்தாகின.

இந்நிலையில், பனியின் தாக்கம் தொடரும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# தென்கொரிய பொருள்களுக்கு 25 சதவீத வரி உயர்த்தப்படும்

## டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு



தென்கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான வரியை 25 சதவீதமாக உயர்த்துவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு எட்டப்பட்ட வர்த்தக உடன்படிக்கையை தென்கொரியா முறையாகப் பின்பற்றவில்லை என தெரிவித்தே டொனால்ட் ட்ரம்ப் இந்த வரி அதிகரிப்பை அறிவித்துள்ளார்.

இதன்படி, வாகனங்கள், மரம், மருந்துகள் மற்றும் ஏனைய அனைத்து 'பரஸ்பர வர்த்தகப் பொருள்களுக்கும்' விதிக்கப்பட்டிருந்த 15 சதவீத வரியானது, இனி 25 சதவீதமாக அதிகரிக்கப்படும் டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக ஊடகப் பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

உடன்படிக்கையின்படி, அமெரிக்கா தனது வரிகளை விரைவாகக் குறைத்துள்ள போதிலும், தென்கொரிய நாடாளுமன்றம் அந்த உடன்படிக்கைக்கு ஒப்புதல் வழங்குவதில் மந்தகதியில் செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவின் இந்தத் தீர்மானம் குறித்து தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என தென்கொரியா தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து வொஷிங்டனுடன் அவசர பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க விரும்புவதாகவும் தென்கொரியா கூறியுள்ளது.

இந்தநிலையில், கனடாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தென்கொரிய தொழில் அமைச்சர் கிம் ஜுங்-க்வான், விரைவில் வொஷிங்டன் சென்று அமெரிக்க வர்த்தகச் செயலாளர் ஹவார்ட் லட்னிக்-ஐ சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 27/01/2026

**வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க கனடாவில் புதிய நடவடிக்கை**



C2▸



# கனடாவுடன் மேற்கொண்ட வர்த்தக ஒப்பந்தம் எந்த மூன்றாம் நாட்டையும் குறிவைப்பதல்ல

## சீனா விளக்கம்



கனடாவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆரம்ப நிலை வர்த்தக ஒப்பந்தம் எந்த மூன்றாம் நாட்டையும், குறிப்பாக அமெரிக்காவையும் குறிவைப்பதல்ல என சீனா தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டால் கனடா தயாரிப்புகளுக்கு 100 சதவீத சுங்கவரி விதிக்கப்படும் என அமெரிக்கா மிரட்டல் விடுத்ததைத் தொடர்ந்து, சீனாவின் இந்த விளக்கம் வெளியாகியுள்ளது.

C2▸

# இயன்றவரை வீட்டிலேயே இருக்குமாறு டொராண்டோ மக்களுக்கு அறிவுறுத்தல்




டொராண்டோ நகரில் ஏற்பட்டுள்ள ஆபத்தான வீதி நிலைமைகள் காரணமாக, அவசியமில்லை என்றால் வீட்டிலேயே இருக்குமாறு குடிமக்களுக்கு டொராண்டோ பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

வீட்டில் இருக்க முடிந்தால், வீட்டிலேயே இருங்கள் எனவும் வீதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் அவற்றை சுத்தம் செய்ய முழு முயற்சியையும் மேற்கொண்டு வருகிறது.

C2▸



# வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க கனடாவில் புதிய நடவடிக்கை

கனடிய மக்களின் வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்க உதவும் புதிய நடவடிக்கை தொடர்பில் பிரதமர மார்க் கார்னி அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக பொருள்கள் சேவைகள் வரி கொடுப்பனவு தொகையை உயர்த்துவதாக அறிவித்துள்ளார்.

குளிர்கால இடைவேளைக்குப் பிறகு நாடாளுமன்றம் மீண்டும் கூடியுள்ள நிலையில், கனடா பிரதமர் மார்க் கார்னி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கனடா மளிகைப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய நன்மை என்ற புதிய திட்டத்தை கார்னி அறிமுகப்படுத்தினார். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் புளுவு தொகை, அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25 சதவீதம் வரை உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனுடன் சேர்த்து, எதிர்வரும் ஜுன் மாதத்தில் ஒருமுறை 50 சதவீத கூடுதல் தொகை (Top-up) வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



மத்திய அரசின் கணக்கீட்டின் படி, நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம், இந்த உயர்வுகளால் இந்த ஆண்டில் அதிகபட்சமாக 1,890 டொலர் வரை பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த உதவி ஆண்டுக்கு 1,100 டொலர் மட்டுமே கிடைக்கின்றது. தனிநபர் ஒருவர், இந்த ஆண்டில் 950 டொலர் பெறுவார், இது தற்போது வழங்கப்படும் 540 டொலருடன் ஒப்பிடுகையில் கணிசமான உயர்வாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

உயர்ந்து வரும் மளிகைப் பொருள்கள் விலை, அத்தியாவசியச் செலவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவுகளின் அழுத்தத்தை குறைப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என அரசு தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு, குறைந்த மற்றும் நடுத்தர வருமானக் குடும்பங்களுக்கு குறிப்பிடத்தக்க நிவாரணமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## கனடாவுடன் மேற்கொண்ட...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாதம் அறிவிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ், கனடாவின் கனோலா இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட சுங்கவரிகளை சீனா குறைக்க உள்ளதாகவும், மேலும் கனடிய குடிமக்களுக்கு சீனாவுக்குள் விசா இன்றி பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தால் சீனாவுக்கு தன் பொருள்களை கனடா வழியாக சேகரிக்க வாய்ப்பு கிடைக்கும் என அமெரிக்கா கூறியுள்ளது.

கனடிய தயாரிப்புகள் மீது 100 சதவீத சுங்கவரி விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனா மற்றும் கனடா இடையே உருவாக்கப்பட்டுள்ள புதிய வகை மூலோபாய கூட்டாண்மை, எந்த மூன்றாம் தரப்பையும் குறிவைப்பதல்ல என சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குவோ ஜியாகுன் தெரிவித்துள்ளார்.

நாடுகள் இடையிலான உறவுகளை பூஜ்ஜியம்-லாபம் என்ற மனப்பான்மையுடன் அல்லாமல், இருதரப்புக்கும் லாபம் தரும் அணுகுமுறையுடன், மோதலுக்குப் பதிலாக ஒத்துழைப்பின் மூலம் முன்னெடுக்க வேண்டும் என்பதே சீனாவின் நிலைப்பாடு என்று வலியுறுத்தினார்.

இந்த விவகாரம், உலகளாவிய வர்த்தகத்தில் உருவாகும் புதிய கூட்டாண்மைகள் மற்றும் அதனால் ஏற்படும் அரசியல் பதற்றங்களை மீண்டும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.

---

## இயன்றவரை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இதுவரை பதிவான அளவுக்கு அதிகமான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால், அதற்கு நேரம் எடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணம் அவசியமாக இருந்தால், தனிப்பட்ட வாகனங்களை தவிர்த்து பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துங்கள் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த கடும் பனிப்புயலைத் தொடர்ந்து, வீதி விபத்துகள் அதிகரித்துள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், உங்கள் வாகனத்துக்கும் முன்னால் செல்லும் வாகனத்துக்கும் இடையில் போதுமான இடைவெளியை விட்டு செல்லுங்கள் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிறுத்துவதற்கு கூடுதல் நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். மிகுந்த கவனத்துடன் பயணம் செய்யுங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.






# கனடாவின் வாகன் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் வாகன் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் வெஸ்டன் வீதி – ரௌஎன்ட்ரீ டெய்ரி வீதி சந்திப்புக்கு அருகிலுள்ள பகுதியில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல துப்பாக்கி குண்டு காயங்களுடன் கண்டெடுக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர், உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும், அங்கு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூடு திட்டமிட்டு, குறிப்பிட்ட நபரை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்டதாக உறுதியாக கூற முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், இதற்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், கிப்லிங் வீதி – வுட்பிரிட்ஜ் அவென்யூ பகுதியில் வாகனம் தீப்பற்றியதாக வந்த தகவலின் அடிப்படையில் மற்றொரு சம்பவம் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த இரு சம்பவங்களுக்கும் தொடர்பு உள்ளதா என்பதை பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர். இதுவரை சந்தேகநபர் குறித்த விபரங்கள் வெளியிடப்படவில்லை.

# ‘பிஸ்ஸா பாப்ஸ்’ தயாரிப்புகளுக்கான மீளப்பெறல் நடவடிக்கை விரிவாக்கல்



நத்தார் பண்டிகைக்கு முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்த ‘பிஸ்ஸா பாப்ஸ்’ தயாரிப்புகளுக்கான மீளப்பெறல் நடவடிக்கை தற்போது மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது.

ஈகொலி கிருமி கலந்திருக்கக் கூடிய சந்தேகத்தின் காரணமாக, பல்வேறு வகையான பிஸ்ஸா பாப்ஸ் தயாரிப்புகள் மீளப்பெறப்பட்டுள்ளதாக கனடிய உணவு ஆய்வு முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மூன்று–சீஸ், பெப்பரோனி, பெப்பரோனி என்ட் பேக்கன், டெலக்ஸ், 3-மீட் உள்ளிட்ட வகைகள், பல்வேறு பொதி அளவுகளில் அடங்குகின்றன.

பாதிக்கப்பட்ட தயாரிப்புகளின் முழுப் பட்டியல் கனடிய உணவு ஆய்வு முகவர் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு முன், டிசம்பர் 21 அன்று அறிவிக்கப்பட்டிருந்த மீளப்பெறலும், ஈ.கொலி கிருமி தொற்று சந்தேகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

கடந்த மாதம், கனடா பொது சுகாதார முகவர் நிறுவனம், இந்தப் பரவல் ஏழு மாகாணங்களுக்கு பரவியுள்ள நிலையில், பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என தெரிவித்திருந்தது.

ஈகொலி கிருமி கலந்த உணவு வாசனை அல்லது தோற்றத்தில் கெட்டதாகத் தெரியாமல் இருந்தாலும், உடல் நலக் கோளாறுகளை ஏற்படுத்தக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே, மீளப்பெறப்பட்ட தயாரிப்புகளை பயன்படுத்தாமல் உடனடியாக குப்பையில் வீசவோ அல்லது வாங்கிய கடைக்கு திருப்பி வழங்கவோ நுகர்வோரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.